ஆம்பல்

மலர் - 1 இதழ் -1

வெளியீடு

திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவம்

ஆம்பல்

மலர்-1 இதழ்-1




தமிழ்க் கணக்கியல் அறிஞர் கு.வெங்கடாசலம்,
வரலாற்று அறிஞர் இல.தியாகராஜன் நினைவு அறக்கட்டளைச்
சொற்பொழிவுக் கட்டுரைகள்.

முனைவர் வீ.செல்வகுமார்

இரா.கோமகன்

வெளியீடு :

திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவம்

ஆம்பல்

மலர்-1, இதழ்-1

முனைவர் வீ.செல்வகுமார்

இரா.கோமகன்

முதல் பதிப்பு: மே, 2025

Aambal

Malar-1, Ithazh-1

Dr.V.Selvakumar
R.Komagan

ISBN : 978-81-989641-7-5

வெளியீடு

திருவண்ணாமலை மாவட்ட வரலாற்று ஆய்வு நடுவம்

வேங்கிக்கால்,

திருவண்ணாமலை - 606604.

Tiruvannamalai District Center for Historical Research
Vengikkal,
Tiruvannamalai – 606604.

மின்னஞ்சல் : tvmchr@gmail.com

Layout & Cover Design: Sitringoor M.Raja

All rights reserved.

No part of this publication may be reproduced, stored, in or introduced into a retrieval system, or transmitted in any form or by any means, whether electronic, mechanical, photocopying, recording or otherwise, without the prior permission of author(s) of this book. Any unauthorized distribution of this book may be liable in law accordingly. All rights relating to this work rest with the copyright holder. Except for reviews and quotations, use or republication of any part of this work is prohibited under the copyright act, without the prior written permission of the author(s) of this book.

கல்வெட்டுகளில் கணக்கு

முனைவர் வீ.செல்வகுமார்

தலைவர்

கடல்சார் வரலாறு மற்றும் கடல்சார் தொல்லியல் துறை

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் 613010

selvakumarodi@gmail.com

1. முன்னுரை

இடைக்கால இந்திய அரசுருவாக்கத்தில் நிலநிருவாகம் முக்கியமான பங்குவகித்தது. நிலங்கள் முறையாக அளக்கப்பட்டு உரிய அலுவலர்கள் நியமிக்கப்பட்டு நிலநிருவாகம் செய்யப்பட்டது. நிலவரி அரசின் வருவாய் ஆதாரங்களுள் முக்கியமான ஒன்றாக இருந்தது. தொல்லாவணங்களான கல்வெட்டுகள் அரசின் நிலநிருவாகத்தின் பகுதியாக நிலவரி, நிலக்கொடை, நிலவிற்பனை தொடர்பான கணக்குகளை அளிக்கின்றன. இக்கணக்குகளை நிருவகிக்க கணக்கன், கரணத்தான், கரணம் என்று அழைக்கப்பட்ட கணக்கு அலுவலர்கள் இடைக்காலத்தில் இருந்தனர், இக்கட்டுரை இடைக்காலக் கல்வெட்டுக்களில் காணப்படும் நீட்டல் அளவைகள், கணக்குகள், கணக்கு/கணக்கன் எனும் அலுவலர்கள் குறித்த சில விளக்கங்களை அளிக்கிறது.

சோழர் காலத்தின் கல்வெட்டுகள் பெரிதும் நிருவாக ஆவணங்களாக அமைந்துள்ளன. இவை அரசின் வரிகள், நிலங்களின் துல்லியமான இருப்பிடம், நில அளவுகள், அவற்றின் வகைகள், வரிகள், அளக்கப்படவேண்டிய நெல், பொன், படிமங்கள், பிற பொருள்கள், காசுகள், நீட்டல், நிறுத்தல், கொள்ளவு அளவைகள் ஆகியவற்றைக் குறித்த தகவல்களைக் கொண்டவையாகும். இவற்றில், எண்கள், குறியீடுகள், பின்னங்கள், கணக்குகள் உள்ளன. இவை இடைக்கால அரசியல், பொருளியல் வரலாற்றிற்கான முக்கியமான ஆவணங்களாகும். இவற்றை நுண்ணாய்வு செய்வதன் வழியாக அக்காலத்தின் சமூக, பொருளியல் செயல்பாடுகளைப் புரிந்துகொள்ளலாம்.

2. முந்தைய ஆய்வு

கல்வெட்டுகள், ஆவணங்கள், நூல்களில் உள்ள அளவுகோல்கள், கணக்கு முறைகள், பின்னங்கள் குறித்த ஆய்வுகளை வெங்கையா *(Venkaiyya 1913)*, ராஜு, மைன்கர் *(Raju and Mainker 1964)*, ஸ்ரீனிவாசன் *(Srinivasan 1979)*, எ. சுப்பராயலு *(2001a, 2001b, 2001c)*, சண்முகம் *(Shangmugam 1987)*, பகவதி *(2003)*, நொபொரு கராஷிமா *(Karashima 2006)*, கொடுமுடி சண்முகன் *(2006, 2022)*, கு. வெங்கடாசலம் *(2023)*, கலைக்கோவன், நளினி, சு. இராசகோபால் *(Heitzman and Rajagopal 2004)* உள்ளிட்ட ஆய்வாளர்கள் *(Selvakumar 2014, 2015, 2016, 2021)* ஆய்வு செய்துள்ளனர்.

கல்வெட்டுக்களில் வரக்கூடிய கீழ்க்கணக்கு, பின்னங்கள் ஆகியவற்றின் குறியீடுகளை தென்னிந்தியக் கல்வெட்டுக்களைப் பதிப்பித்த ஆசிரியர்களும் விளக்கியுள்ளனர். இவை மட்டுமின்றி கணக்கு நூல்களான கணக்கதிகாரம், ஆஸ்தான கோலாகலம் ஆகியவையும் அளவுகள் குறித்த தகவல்களை அளிக்கின்றன. பல தமிழ்க் கணக்குச் சுவடிகள் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

3. கல்வெட்டுக் கணக்கு ஆய்வுகளின் அவசியம்

கல்வெட்டுக்கள் நிலவகைகள், நிலவருவாய், ஊதியம் குறித்துப் பேசுகின்றன. பொருள்களின் விலை குறிப்பாக அணிகலன்களின் விலையைக் கூறுகின்றன. நீங்குநிலம், அதாவது பொதுப் பயன்பாட்டிற்கான நிலங்கள் கழிக்கப்படுகின்றன. கழித்தல், கூட்டல், வகுத்தல் கணக்குகள் கல்வெட்டுகளில் வருகின்றன. கல்வெட்டுகளில் குறிப்பிடப்பெறும் கணக்குகளை ஆய்விற்குட்படுத்துவது அக்காலப் பொருளாதார அறிவைப் புரிந்துகொள்ளவும், அவர்களது அறிவியல், கணிதத் திறனை அறிந்துகொள்வதற்கும் அவசியமாகும். கல்வெட்டுகளில் காணப்படும் கணக்குகள் இடைக்கால மக்களின் கணக்கறிவை வெளிப்படுத்துகின்றன. ஆய்வுக்காக கல்வெட்டுகளில் காணப்படும் எளிமையான நிலக்கணக்குகளை நாம் உற்று நோக்கி அவற்றைப் புரிந்துகொள்வதும், இளைய தலைமுறையினருக்குப் கற்றுக்கொடுப்பதும் அவசியமாகும். இது மாணவர்களின் அறிவுத்திறனை வளர்க்கவல்லது.

4. தமிழக வரலாற்றில் அளவைகள்

பழங்கால இந்திய இலக்கியங்கள் மரபு வழி அளவைகளைக் குறித்துப் பேசுகின்றன (Raju and Mainker 1964). தமிழில் உள்ள கணக்கு நூல்களில் குறிப்பிடத்தக்கவை கணக்கதிகாரமும், ஆஸ்தான கோலாகலமும் ஆகும் (காரி நாயனார் 1924, 1958, 1998, நாவிலிப்பெருமாள் 2004; தனசுபா, 2022). தமிழில் உள்ள கணக்கு நூலாகிய கணக்கதிகாரத்தில் நீட்டல் அளவுகள் கீழ்க்கண்டவாறு விளக்கப்பட்டுள்ளன (அட்டவணை எண் 1) (காரி நாயனார் 1958). கணக்கதிகாரத்தை இயற்றியவர் காரி நாயனார் ஆவார். இந்த அளவு முறைகள் ஆஸ்தான கோலாகலம் என்னும் கணித நூலிலும் குறிப்பிடப்படுகின்றன. ஆஸ்தானகோலாகலத்தை இயற்றியவர் மதுரையைச் சேர்ந்த நாகனின் மகன் நாவிலிப்பெருமாள் ஆவார்.

அட்டவணை எண் 1 கணக்கதிகாரத்தின் படி நீட்டல் அளவைகள்

அணு 8	= கதிரெதுகள்
கதிரெதுகள் 8	= பஞ்சித்துகள்
பஞ்சித்துகள் 8	= மயிர் முனை
மயிர் முனை 8	= நுண்மணல்
நுண்மணல் 8	= எள்
எள்ளு 8	= நெல்
நெல் 8	= விரல்
விரல் 12	= சாண்
சாண் 2	= முழம் (ஹஸ்தம்)

முழம் 2 = சிறு கோல்

சிறுகோல் 4 = உலகளந்த செம்பொற்கோல் = பெருங்கோல்

உலகளந்த செம்பொற்கோல் 500 = கூப்பிடு தூரம்

கூப்பிடு தூரம் 4 = 1 காதம்

5. எண்கள், பின்னங்கள்

தமிழில் உள்ள எண்கள் பின்னங்களுக்கான குறியீடுகள் இருந்துள்ளன. இவை கல்வெட்டுகளிலும் ஓலைச்சுவடிகளிலும் காணப்படுகின்றன. சில குறிப்பிட்ட நில அளவுகளும், சில பின்னங்களும் நிலஅளவு அலகுகளாக மக்களிடையே இன்றும் பயன்பாட்டில் உள்ளன.

மா

மா என்ற சொல் 1/20 என்ற பின்னத்தைக் குறிக்கும். நிலப்பரப்பில் 20 மா கொண்டது ஒரு வேலியாகும். குழி என்ற சொல் சதுரப் பரப்பைக் குறிக்கும். 100 குழிகள் கொண்டது ஒரு மாவாகும். 2000 குழிகள் கொண்டது ஒரு வேலியாகும். இது தரப்படுத்தப்பட அளவாகும். பல குழிகள் உள்ள மா அளவைகள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அரை மா

அரைமா 1/40 எனும் பின்னமாகும். இது ஒரு மாவில் பாதியாகும். நிலப்பரப்பில் ஒருவேலியில் 40 இல் ஒருபங்கு. ஒரு வேலி 2000 குழிகள் எனில், இது 100/2 = 50 குழியாகும்.

காணி

காணி 1/80 எனும் பின்ன அளவாகும். ஒரு வேலி 2000 குழிகள் எனில் இது 25 குழியாகும். நான்கு காணி ஒரு மாவாகும்.

அரைக்காணி

அரைக்காணி 1/160 எனும் பின்ன அளவாகும். இது காணியில் பாதியாகும். ஒரு வேலி 2000 குழிகள் எனில் இது 12.5 குழியாகும்.

முந்திரி

*முந்திரி 1/320 எனும் பின்ன அளவாகும். ஒரு வேலி 2000 குழிகள் எனில் இது 1/320*2000 = 6.25 குழியாகும்.*

கீழ் அளவுகள்

முந்திரியின் கீழ் உள்ள அளவுகள் 1/320 ஆல் பெருக்கப்படவேண்டும். இவை கல்வெட்டுகளில் குறிப்பிடப்படுகின்றன (வெங்கடாசலம் 2023).

பின்னங்கள் குறித்த குறியீடுகள்

பின்னங்கள் குறித்த குறியீடுகளும் எண்களும் நமக்கு கல்வெட்டு, ஓலை ஆவணங்களில் கிடைக்கின்றன. பல ஆவணங்களிலிருந்து தொகுக்கப்பட்ட இவை அட்டவணை எண் *2* இல் அளிக்கப்பட்டுள்ளன.

அட்டவணை எண் 2. தமிழ் பின்ன அளவுகளும் குறியீடுகளும்

எழுத்தில் எண், பின்னம்	எண்ணில்/பின்ன வடிவில்	பின்னப் பெருக்கலில்	குறியீடு	குறியீடு *TVA 2014*
ஆயிரம்	*1000*			
நூறு	*100*			
பத்து	*10*			
ஒன்பது	*9*			
எட்டு	*8*			
ஏழு	*7*			
ஆறு	*6*			
ஐந்து	*5*			
நான்கு	*4*			
மூன்று	*3*			
இரண்டு	*2*			
ஒன்று	*1*			
முக்கால்	*¾*			
அரை	*½*			
கால்	*¼*			

நாலுமா	*1/5*	*4/20*		
அரைக்கால்	*1/8*	*1/2x ½*		
இருமா	*1/10*	*2 x 1/20*		
மாகாணி, வீசம்	*1/16*	*1/20+1/80=5/80= 1/16*		
மும்மாக்காணி	*3/16*			
மா	*1/20*			
அரை வீசம்	*1/32*	*1/2 x 1/16*		
அரைமா	*1/2*	*1/2 x 1/20*		
கால் வீசம்	*1/64*	*1/4 x 1/16*		
காணி	*1/80*			
முக்காணி	*3/80*	*3 x1/80*		
அரைக்காணி	*1/160*	*1/2 x1/80*		
முந்திரி	*1/320*			

6. நீட்டல் அளவைகள்

நீட்டல் அளவைகள், தோரை (நெல்), விரல், சாண், முழம், சிறுகோல், பெருங்கோல் எனக் கல்வெட்டுக்களிலும், சுவடிகளிலும் குறிப்பிடப்படுகின்றன (அட்டவணை எண் 1). இவை குறித்த வாய்ப்பாடுகள் கணக்கதிகாரம், ஆஸ்தானகோலாகலம், கணக்கதிகார ரத்தினச்சுருக்கம் போன்ற கணித நூல்களில் கிடைக்கின்றன. இவை நெல், சாண், முழம், சிறுகோல், பெருங்கோல், கூப்பிடு, காதம் எனப்பட்டன. இவற்றில் கூறப்படும் மரபு வழியான விரலின் அளவு 1.76 செமீ என ஆய்வாளர்களால் கணக்கிடப்பட்டுள்ளது.

கோல்கள்

கோல்கள் தண்டங்கள் என சமஸ்கிருதத்தில் அறியப்பட்டன. இவை நில அளவு கோல்களாகும். இவற்றில் பல வகைகள் உள்ளன. முழக்கோல், தச்சமுழம், ஊர்க்கோல், நாட்டளவுகோல், நஞ்சைக்கோல், புஞ்சைக்கோல் எனப் பல அளவுகோல்கள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. இவை கோயில்களிலும் பாறைகளிலும், + குறியீட்டால் தொடக்கமும், முடிவும்; இடைப்பகுதி | குறியீட்டாலும் குறிக்கப்பட்டுள்ளன. இவற்றின் அடிப்படையில் நில அளவுகோல்கள் ஊர்க் கணக்குகளாலும், தலையாரிகளாலும் உருவாக்கப்பட்டு நில அளவிற்குப் பயன்படுத்தப்பட்டன. இவற்றில் 12 அடிக்கோல்,16 சாண் கோல், 18 சாண் கோல் உள்ளிட்ட பல கோல்கள் இடைக்காலத்தில் பயன்படுத்தப்பட்டன (Shanmugam 1987; Selvakumar 2014, 2015, 2016 2021). இவற்றின் அடிப்படையிலே நீர் நிலங்களும், பிற நிலங்கள், வழிகள், சில கட்டட அமைப்புகளும் உருவாக்கப்பட்டன (படம் 1). சீயமங்கலத்தில் உள்ள இடைக்கால அளவுகோல் ஒரு நேர்கோட்டால் குறிக்கப்பட்டுள்ளது. இதன் அளவு 392 செமீ ஆகும் (படம் 2). இது போன்ற பல அளவுகோல்கள் கோயில்களில் குறிக்கப்பெற்றுள்ளன.

படம் எண் 1. செம்பியன் மாதேவி (நாகப்பட்டினம்) ஊர் நிலம்: சதுரமான அமைப்பு

உலகளந்த கோல்

உலகளந்தகோல் என்னும் அளவுகோல் பல கல்வெட்டுகளில் காணப்படுகின்றன. உலகளந்தகோல் இடைக்காலத்தில் அரசால் பயன்படுத்தப்பட்ட ஒரு தரப்படுத்தப்பட்ட கோல் எனலாம். உலகளந்த கோலால் நூறு குழி கொண்டது ஒரு மாவாக எனப் பொ.ஆ. 1009 ஆம் ஆண்டுக் கல்வெட்டில் ஒரு குறிப்பு வருகிறது. உலகியல் மரபினமைந்து உலகியல்சாண் பந்நிரண்டால் சமைந்த என்ற குறிப்பு பொ.ஆ. 1012 ஆம் ஆண்டுக் கல்வெட்டில் வருகிறது (SII 7, 863).

திருவுலளந்தருளினபடி பன்னீரடிக்கோல் எனும் அளவுகோல் முதலாம் குலோத்துங்கன் காலத்தில் இருந்ததாக கல்வெட்டுச் சொல்லகராதியில் குறிப்பு உள்ளது (கோவிந்தராஜன் 1987: 265). திருவுலகளவின் படி பந்நீரடிக்கோலால் குழி ஆயிரத்திற்கும் என (SII 7, 432) 1187 ஆம் ஆண்டைச் சேர்ந்த ஒரு கல்வெட்டிலும், குலோத்துங்கசோழ தேவர்க்கு 16 ஆவது திருவுலகளந்த கணக்குப்படி நீங்கல் நீக்கி (SII 5, 990), எனவும், உலகளந்தான் நாழி, உலகளந்தான் மரக்கால் என்ற குறிப்புகளும் கல்வெட்டுக்களில் காணப்படுகின்றன. இங்கு உலகு என்பது நாட்டைக்குறிக்கும். ஊரளவுகோல், நாட்டளவு கோல் என்பதற்குப் பதிலாக பெருநிலப்பரப்பில், பொதுவாகப் பயன்படுத்தப்பட்ட கோல்கள் இவ்வாறு குறிக்கப்பெறுகின்றன. (SII 7, 143, 12, 147). இவற்றை அரசு அமைப்பு தரப்படுத்தி நாட்டில் பயன்படுத்த ஏற்பாடு செய்திருக்கவேண்டும்.

திரு உலகளந்தபடி

சோழர்காலத்தில் நில அளவுகள் தரப்படுத்தப்பட்டதற்கான சான்றுகள் திருவாவடுதுறை கோமுக்தீஸ்வரர் கோயிலில் உள்ள விக்கிரமசோழனின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் கிடைக்கிறது (தியாகராஜன் 2017: 185; 71 of 1926). பொ.ஆ. 1121 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த ஒரு கல்வெட்டு

'' விருதராஜ பயங்கர வள நாட்டு மேற்கா நாட்டு ப்ரஹமதேயம் உலகுய்யக்கொண்ட சோழ சருப்பேதிமங்கலத்து சபையோம் உய்யக்கொண்டார் வள நாட்டுத் திரைமூர் நாட்டு உடையார் கோயிலின் முன்பில்... நம்மூர் ... நிலம் உ வேலியினால் மா சய பந்நீரடிக்கோலால் அஞ்நூற்று ஒரு பத்து இரண்டு குழி கொண்டதொருமாவாக வந்த நிலம் நாற்பது மாவிநால் திருவுலகளந்தருளிநபடி நூறு குழி கொண்ட தொருமாவாக வந்த நிலம் யவ இந்நிலம் பத்தே காலும்''

என்று குறிப்பிடுகிறது. இதன்படி

12 அடிக்கோலால் 512 குழி கொண்டது 1 மா =

திருஉலகளந்தபடி 100 குழி கொண்டது 1 மா

என மாற்றப்பட்டுள்ளது.

12 அடிக்கோலால் 512 குழி கொண்டது 1 மா = 2 வேலி = 40 மா

= 512 குழி x 40 = 20480 குழி = 100 குழி கொண்ட மா

எனில்

20480 குழி /2000 குழி (ஒரு வேலி) = 10 வேலி + 5 மா (20 குழி குறைவு) அதாவது யவ வேலி 10 1/4 வேலி

மேற்கண்ட சமனி வாய்ப்பாடு திருவுலகளந்தபடி என்பது 100 குழி கொண்டது ஒரு மா என திருத்திய நில அளவையைக் குறிக்கிறது. மேலும் முதலாம் குலோத்துங்கன் காலத்திலிருந்து 12 அடிக்கோல் பரவலாகப் பின்பற்றப்பட்டுள்ளதை இது உணர்த்துகின்றது.

மேற்குறிப்பிட்ட கல்வெட்டு சோழர் காலத்தில் 12 அடிக்கோலும், 100 குழிகொண்ட மாவும், 2000 குழிகொண்ட வேலியும் தரப்படுத்தப்பட்ட நில அளவாக இருந்தது எனபதை உணர்த்துகின்றது. பழங்காலத்தில் மா, வேலி அளவுகள் வெவ்வேறாக

இருந்து குழப்பத்தை உருவாக்கிய நிலையில் சோழ அரசர்கள், நிருவாக அலுவலர்களின் ஆலோசனையின் படி திருவுலகளந்த, உலகளந்த என்ற சொல்லாட்சியை இந்த மாறுபட்ட தரப்படுத்தப்பட்ட கணக்கு அளவைக் குறிக்கப் பயன்படுத்தி இருக்கின்றனர். எனவே, உலகளந்த என்ற சொல்லாட்சி அக்காலத்தில் உருவாக முக்கியமான அளவை முறை மாற்றத்தைக் குறிக்கிறது. 16 சாண் கோலும் தரப்படுத்தப்பட்ட அளவாக இருந்துள்ளது.

7. தஞ்சாவூர் பெரியகோயில் அளவும் பதினாறு சாண் கோலும்

தஞ்சாவூர் பெரியகோயில் அளவுகளின் வாயிலாக இடைக்கால அளவை முறைகள் குறித்த சில தெளிவு நமக்குக்கிடைக்கிறது. தஞ்சாவூர் பெரியகோயிலின் கருவறை முதல் முக மண்டபம் வரையுள்ள நடுக்கோயிலுக்கும் மதிற்சுவர் அதனை ஒட்டிய திருச்சுற்று மாளிகைக்கும் இடையே உள்ள இடைவெளி சுமார் 39.2-3 மீட்டர் என்ற அளவில் உள்ளது (படம் எண் 4-5). இது பதினாறுசாண் கோலின் பத்து மடங்கு ஆகும். இது 392 செமீ அளவுள்ள சீயமங்கலம் அளவுகோலை ஒத்துள்ளது. அதாவது 10 மடங்கு. மேலும் கருவறையின் அளவு 792 செமீ என்ற அளவில் உள்ளமை, 396 செமீ என ஒரு செந்தர அளவில் உள்ளது. எனவே இந்த 392 செமீ அளவு ஒரு செந்தர அளவு எனக் கருதலாம்.

(படம் எண் 3 சீயமங்கலம் அளவுகோல் கல்வெட்டு)



(படம் எண் 4 தஞ்சாவூர் பெரிய கோயில் அமைப்பு நன்றி; எகோல் பிரான்சே)



(படம் எண் 5. தஞ்சாவூர் பெரிய கோயில் நடுக்கோயில் முற்ற இடைவெளி அளவுகள்)

8. நிலப்பரப்பு அளவுகள்

பரப்பளவுகள் நில அளவைகளில் தெளிவாகக்குறிப்பிடப்படுகின்றன. இவை குழி, மா, வேலி எனப்பட்டன. இவற்றின் பின்ன அளவுகளான காணி, முந்திரி போன்றவற்றை மேலே கண்டோம்.

குழி

குழி என்பது சதுரத்திற்கான நாட்டுவழக்கில் உள்ள தமிழ்ச் சொல்லாகும். ஒரு கோல் நீளமும் ஒருகோல் அகலமும் கொண்ட பரப்பளவு ஒரு குழியாகும். இது இன்றும் சோழ நாட்டுப் பகுதியில் பயன்பாட்டில் உள்ளது. 100 குழிகள் கொண்டது ஒரு மாவாகும். குழியின் அளவு அளவுகோலின் அளவைப் பொறுத்து மாறுபடக்கூடியதாகும்.

மா

தரப்படுத்தப்பட்ட மா 100 குழிகளைக்கொண்டது. 20 மா ஒரு வேலி ஆகும். ஆனால் மாவில் பலவகைகள் உள்ளன. இவை 128, 256, 512 குழிகளையும் கொண்டிருக்கலாம்.

பட்டி

பட்டி, பட்டிகை தொண்டை மண்டலத்தில் பயன்படுத்தப்பட்ட ஒரு நில அளவாகும். 18 சாண் கோலால் 1000 குழி கொண்டது ஒரு பட்டியாக என்று ஒரு கல்வெட்டு குறிப்பிடுகிறது (SII 7, 942, 1.3.)

வேலி

வேலியின் அளவும் மாறுபாடு அடையக்கூடியதாகும். 2000 குழிகள் கொண்டது ஒரு வகையான தரப்படுத்தப்பட்ட வேலியாகும். வேலி பெரிய முழு அளவுப்பரப்பாகும்.

8. கல்வெட்டில் கணக்குகள்

இடைக்காலக்கல்வெட்டுகளில் பல வகையான கணக்குகள் காணப்படுகின்றன. இவற்றில் சிலவற்றை இங்கு காணலாம்.

8.1. நீங்கு நிலம் குறித்த கணக்கு

வேளாண் பயன்பாடு அல்லாத நிலங்கள் நீங்கு நிலம் என வகைப்படுத்தப்பட்டு, வரிவிதிப்பிலிருந்து நீக்கப்படுகின்றன.

தென்னிந்தியக் கல்வெட்டுத் தொகுதி 5. கல்வெட்டு எண் 632 நீங்கு நிலம் குறித்த கணக்கை விவரிக்கிறது. இதை மனக்கணக்காகவும் உடன் செய்து பார்க்கலாம்.

கல்வெட்டு

"மூன்றாம் சதிரத்து நிலம் நிலம் முக்காணி இதில் குலோத்துங்கசோழப் பெருவழி நிலம் அரைக்காணி நீக்கி நிலம் அரை மா அரைக்காணி" எனக் குறிப்பிடுகிறது.

முக்காணி = அரைமா காணி எனப் பிரித்துக்கொள்ளலாம் (மனக்கணக்கிற்கு).

முக்காணி - குலோத்துங்கசோழப் பெருவழி நிலம் அரைக்காணி =

3/80 -1/160

6-1 /160 = 5/160 = 5/160 == 1/40+1/160

அரைமா அரைக்காணி.

8.2. நல்லூரர் கல்வெட்டில் கணக்கு

பாபனாசம் அருகில் உள்ள நல்லூரில் உள்ள மூன்றாம் இராசராசனின் மூன்றாவது ஆட்சியாண்டுக் கல்வெட்டு (பொ.ஆ. 1218) பிணம் போகும் வழிக்காக விடப்பட்ட நிலத்தைக் குறித்த தகவலைப் பதிவு செய்கிறது. பிணம் ஒரு குறிப்பிட்ட வழியே செல்லக்கூடாது என்று சிலர் எதிர்த்த நிலையில், வேறு ஒரு நிலம் மாற்றாக வழங்கப்படுகிறது (மார்க்சியகாந்தி, இராமச்சந்திரன் 2004: 138). இதற்காக

திருநல்லூர் நாயனார் கோயில் தானத்தாரும் கேசவ விண்ணகர் எனும் திருமால் கோயில் தானத்தாரும் நிலப் பரிவர்த்தனை செய்துகொள்கின்றனர்.

"கேசவ விண்ணகர் எம்பெருமான் திருவிடையாட்டத்து எல்லைக்கு கிழக்கும் ஊ(ர்)ரில் நின்றும் வடக்கு நோக்கி போகிற பலாற்றும் பெருவழியில் தெற்கடைய நல்லூரான பஞ்சவன் மாதேவி [சதுர்வேதி மங்கலத்து] மஹாசபையாருடன் பரிவற்தனம் பண்ணி திரு நாமத்துகாணியான ஒழுக்கை நிலத்து தெற்கடைய தென்கை வடகை கோல் இரண்டுக்கும்

கைமிகைகோல் பதினஞ்சே முக்காலே மூன்று மாவினால் பெருங்குழி முப்பத்தி ஒன்றே முக்காலே ஒரு மாவும்"

அதன் அளவு பின்வருமாறு,

"பெருங்குழி முப்பத்தி ஒன்றே முக்காலே ஒரு மாவும்"

31 ¾ +1/20

"பதினஞ்சே முக்காலே மூன்று மா கோல் x 2 கோல்"

(15 கோல் x 2 கோல்) = 30 + (2 கோல் x ¾ கோல்)= 1.5 + (2 கோல் x 3/20 கோல்)= 6/20 = 31 3/4 + 1/20

அல்லது 2 x (63/4+3/20)

2 x 315+3/20

2 x 318/20= 636/20=31+16/20=31+3/4+1/20

பெருங்குழி முப்பத்தி ஒன்றே முக்காலே ஒரு மாவும்

"இக்குழி முப்பத்தி ஒன்றே முக்காலே ஒரு மாவுக்கு தலைமாறாக இந்த கேசவ விண்ணகர் எம்பெருமான் திருவிடையாட்டத்து எல்லைக்கு வடக்கு திரு நல்லூர் நாயனார் செண்பகத் திருநந்தவனத்துடனே சேர நி[ற்க] விட்ட

தென்கை வடகை கோல் எட்டே காலுக்கு கீழ்கை மிகைக் கோல் மூன்றே முக்காலே இரண்டு மாவினால் பெருங்குழி முப்பத்து ஒன்றே முக்காலே ஒரு மாவும்"

8 ¼ கோல் x 3 ¾ 2/20 கோல் = 33/4 x (15/4 + 2/20) = 75+2/ 20= 77/20
33/4 x 77/20= 2541/80= 31 +61/80=31+3/4+1/80 குழி

இங்கு அளவு சற்று குறைவாக உள்ளது. 1/20 க்குப்பதிலாக 1/80 ஆக உள்ளது

இக்கல்வெட்டில் அளவு பெருங்குழி எனக் குறிப்பிடப்படுகிறது ஆனால் அளவுகோலின் நீளம் குறிப்பிடப்படவிலை.

8.3. நல்லூர் கல்வெட்டில் குழி மாற்றுக் கணக்கு

இதே ஊரில் பிணம் போகும் வழிக்கான 1218 ஆம் ஆண்டுக் கல்வெட்டு பெருங்குழி, உரியகுழி பற்றிக் கூறுகிறது (மார்க்சியகாந்தி, இராமச்சந்திரன் 2004: 137).

தென் வடகைகோல் இரு கோலுக்கு கீழ் கைமிகைகோல் 28 இருபத்தெட்டினால் குழி (56 குறியீட்டில்) ஐம்பத்தாறினால் உரிய குழி இக்குழி 87 ½

இதில் 56 குழி மாற்றப்பட்டு 87.5 குழி ஆகின்றது.

2 கோல் x 28 கோல் ஆக அளவு 56 குழி 87.5 குழியாக மாறுகின்றது.

2.5 கோல் x 35 கோல் ஆக அளவு 87.5 குழியாகும்.

முதலில் 20 சாண் கோல் பெருங்குழிக்குப் பயன்படுத்தப்பட்டிருந்தால் பின்னர் அது

தற்போது 16 சாண் கோல் எனில்

2 கோல் = 40 சாண்

40 சாண்= 2.5 மடங்கு 16 சாண் கோல் எனில்

முதலில் 20 சாண் கோல் பயன்படுத்தப்பட்டிருந்தால் பின்னர் அது

28 கோல் 20 சாண் = 560 சாண்

தற்போது 16 சாண் கோல் எனில்

35 கோல் 16 = 560 சாண்

எனவே இங்கு பெருங்குழியை உரிய குழியாக மாற்றுகிறார்கள். இங்குபயன்படுத்தப்பட்ட அளவுகோல் என்ன என்பது தெரியவில்லை. 20 சாண் கோலிலிருந்து 16 சாண் கோல் அல்லது அதற்கு ஒத்த அளவில் மாற்றப்பட்டிருக்கலாம் என்பது ஒரு தற்காலிக முடிபு. ஏன் இவ்வாறு மாற்றினார்கள் என்பதற்கான சான்று இல்லை.

9. கணக்கு/ கணக்கன்

கணக்கன் என்ற சொல் கல்வெட்டில் பொதுவாக இறுதியில் வருகின்றது. நில ஆவணத்தின் இறுதியில் ஆவணத்தை எழுதி, ஆவணத்தின் கணக்குகளை உட்படுத்தி உருவாக்கியவராகக் குறிப்பிடப்படுகிறார். இவர்கள் பணிபுரியும் இடம், சூழலுக்கு ஏற்ப ஊர் கணக்கு, கோயிற் கணக்கு, நாட்டுக்கணக்கு, வரிப்பொத்தகக் கணக்கு என்று குறிப்பிடப்படுகின்றனர். இவர் ஸ்ரீகர்ணம் எனவும் குறிப்பிடப்படுகிறார். கணக்கர் என்ற பிரிவினரைப் பற்றிய கல்வெட்டு இடைக்காலதிலிருந்து காணப்படுகிறது. இவர்கள் கணக்கு எனவும் சுட்டப்பெறுகின்றனர். கணக்கெழுதும் வழக்கம் இடைக்காலத்தில் உருவாகி இருந்தது. இதுவே பிற்காலத்தில் ஒரு சாதிப்பிரிவாக உருவெடுத்தது. வட இந்தியாவிலும் இத்தகைய கணக்கு எழுதும் சாதிகள் இடைக்காலத்தில் உருவாகியிருந்தன.

ஊர்க்கணக்கு

ஊர்க்கணக்கு என்ற அலுவலர் ஊர்களின் கணக்கை கவனித்துகொண்ட ஊர் அலுவலர் ஆவார். ஊர் கணக்கப்பிள்ளை என்ற அலுவலர் 1980 வ்ரை தமிழ் நாட்டு ஊர்களில் செயல்பட்டு வந்தவர் ஆவார். இடைக்காலத்தில் இத்தகைய அலுவலர்கள் ஊர்களின் கணக்கை நிருவகித்தனர். கும்பகோணம் அருகில் உள்ள பாப நாசம் வட்டத்தில் உள்ள நல்லூர் கல்வெட்டு பனந்தாளுடையான் உத்தமப் பிரியனேன் என்பவரைக் குறித்து கூறுகிறது (மார்க்சீய காந்தி, சீ இராமச்சந்திரன் 2004: 13-89). இங்குள்ள 1241 ஆம் ஆண்டுக் கல்வெட்டில் பனந்தாருடையான் உத்தம பகவன் கோயிற் கணக்கு என்றும் குறிப்பிடப்படுகிறார்.

ஒரு நல்லூர் கல்வெட்டில் குறிப்பிடப்பெறும் கோயிற்கணக்கு மாதான மங்கலமுடையான் வேறு ஒரு கல்வெட்டில் ஊர்க்கணக்கு என்றும்

குறிப்பிடப்படுகிறார். எனவே ஓர் ஊரில் ஊர்க்கணக்கு, கோயில் கணக்கு என்ற இரண்டு கணக்குப் பணிகளைச் கணக்கர் செய்தனர் என்று கூறலாம்.

சில ஊர்களில் கணக்கு எழுதும் கணக்கர், ஊர் மத்தியஸ்தனாகவும் இருந்திருக்கிறார் என தி.வை. சதாசிவ பண்டாரத்தார் குறிப்பிடுகிறார் (சதாசிவ பண்டாரத்தார் 2007 தொகுதி 3. 35). இவர் சுட்டும் முனியர் அகஸ்கீஸ்வார் கோயில் கல்வெட்டு "பணிப்பணியால் ஊர்க்கணக்கு இவ்வுர் மத்யஸ்தன் அமிர்தவல்லி உடையான் கேசவன் நொய்யனான பண்டித ப்ரியனேன் இவை என்னெழுத்து' (SII 8, 204) என்று கூறுகிறது.

நகரக் கணக்கு

நகரக் கணக்கு என்பவரைப் பற்றிய குறிப்பு கல்வெட்டுகளில் உள்ளது. இவர் நகரங்களில் நடந்த கணக்கு வழக்குகளைக் கவனித்துக்கொண்டார். திருவாரூர் மாவட்டம் தென்பாதியில் உள்ள சோழஅரசன் இராசேந்திரனின் 13 ஆம் நூற்றாண்டுக் கல்வெட்டு இராசேந்திர சோழவளநாட்டில் பேரிளமை நாட்டில் இருந்த ஜெயங்கொண்ட சோழபுர நகரத்தார் காலை வழிபாட்டிற்கு நிலக்கொடை அளித்தமையை (நன்னிலம் கல்வெட்டுத் தொகுதி) கூறுகிறது. இதை நகர சபையின் ஆனைப்படி நகரக் கணக்கு எழுதியதாகக் குறிப்பிடுகிறது. நகர கரணத்தான் பற்றிய குறிப்பு ஒரு கல்வெட்டில் காணப்படுகிறது. நகரக் கரணத்தான் பனையூரையான் குற்றத் தண்டப் பொன்னைப் (SII 5, 592) பெற்றுக்கொண்டு கோயிலிருக்கு இரண்டு பட்டங்கள் செய்து அளித்ததைக் குறிப்பிடுகிறது. இவர்கள் சில ஊர் நிருவாகப்பணிகளையும் மேற்கொண்டனர்.

கணக்கப்பேறு, கணக்கவரி

கணக்கப்பேறு என்ற வரி புதுக்கோட்டைக் கல்வெட்டுகளில் காணப்படுகின்றது (IPS 260). இது கணக்கருக்காகப் பெறப்பட்ட வரியாக இருக்கலாம். கணக்கவரி கணக்கருக்காக விதிக்கப்பட்ட வரியாகும் இது. பாடிகாவல் உடன் இதுவும் ஒரு வரியாகக் குறிப்பிடப்படுகிறது (SII, 1, 64).

கணக்க விருத்தி

விருத்தி என்ற சொல் வளர்ச்சியைக் குறிக்கும் கணக்க விருத்தி கணக்கரின் ஊதியமாக அளிக்கப்படும் நிலம் எனலாம். இந் நிலத்திலிருந்து நெல் திருவிதாங்கூர் தொல்லியல் வரிசையில் பதிப்பிக்கப்பட்ட கல்வெட்டு கூறுகிறது (TAS 7, 127).

கணக்கு நூல்

கணக்கு நூல் குறித்து குறிப்புகள் கல்வெட்டில் உள்ளன. பொ.ஆ. 905 ஆம் ஆண்டுக்கல்வெட்டு "கணக்கு நூல் பயில் கணக்கராகவும் " என்று குறிப்பிடுகிறது எனவே இடைக்காலத்தில் இக்கணக்கு நூல்களைப் பயின்று கணக்குகளை கணக்கர் எழுதினர் எனக்கருதலாம் (தகசொ 2002, 145).

கணக்கு வாரியன்

கணக்கு எழுதுபவர்கள் ஒரு குழுவாகச் செயல்பட்டிருந்தனர் எனக் கருதலாம். கணக்குவாரியப்பெருமக்கள் குறித்த குறிப்பு பொ.ஆ. 959 ஆம் ஆண்டுக்கல்வெட்டில் காணப்படுகிறது. கணக்கு வாரியப்பெருமக்கள் கணக்குகளைத் தணிக்கை செய்பவர்களாக இருந்திருக்கலாம் (சுப்பிரமணியன், சண்முகம் 2023, 118). கணக்கர்களுக்கு உதவுபவர்கள் கீழ்க்கணக்கு எனப்பட்டனர்.

கணக்கு காட்டுதல்

கணக்கு காட்டுதலில் தனி மனித ஒழுக்கம் வலியுறுத்தப்பட்டது. கணக்கு காட்டாது இருத்தல் குற்றமாகக் கருதப்பட்டது. முதலாம் பராந்தகன் காலத்து உத்திரமேரூர் கல்வெட்டு கணக்கு காட்டாமல் இருந்தவர்களையும் அவர்களது நெருங்கிய உறவினர்களையும் சபைத் தேர்தலில் போட்டியிடக்கூடாது என வலியுறுத்துகிறது (Sastry 1955).

கர்ணம்

கர்ணம் (கரணம் பொ.ஆ. 753)என்ற சொல்லாட்சியும் கணக்கர்களைக் குறித்த சொல்லாகும் (EI V, 8). கணக்கு, கர்ணம் என்ற இரு சொற்களும் தமிழ் நாட்டில் இருபதாம் நூற்றாண்டில் வழக்கில் இருந்தன. கரணத்தான் என்ற சொல் பொ.ஆ. 1016 ஆம் ஆண்டுக் கல்வெட்டில் காணப்படுகிறது இவ்வூர் கணக்கு என்பதை இவ்வூர் கரணத்தான் எனக்குறிப்பிடுகிறது (SII 3, 10, 11). கரணத்தான் முன்னூற்றுவன் என்ற குறிப்பும் ஒரு கல்வெட்டில் காணக்கிடைக்கிறது.இச்சொல் காரணிகர் எழுத்தர் என்ற சொல்லிலிருந்து வந்திருக்கவேண்டும் என்று மீனாட்சி கருதுகிறார் (Meenakshi 1938: 65-66). கரணப் பெருமக்கள் என்ற குழுக்களும் இருந்தன (SII 4, 267). இவர்கள் கணக்குகளைத் தணிக்கை செய்திருக்கலாம்.

கரணத்தர் என்ற சொல்லாட்சியும் உள்ளது. இது கணக்கரைக் குறிக்கிறது. ஒரு கல்வெட்டு தலைச்சங்காட்டு கரணத்தன் பறடை காவிதி கலமநென் எழுத்து (SII 19, 102) எனக் கூறுகிறது. ஆனைமலை சமணச் சிறபங்கள் அருகில் உள்ள பொ.ஆ. 900 ஆம் ஆண்டுக் கல்வெட்டு ”ஸ்ரீ பொற்கொட்டுக் கரணத்தர் ரக்ஷை” (SII14, 101) எனக் கூறுகிறது, எனவே கணக்கர்கள் இப்பகுதியின் ஊர் மேலாண்மைப் பணிகளையும் செய்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

கர்ம கரணத்தான்

கர்ம கரணத்தான் என்ற குறிப்பு ஒரு கல்வெட்டில் காணப்படுகிறது. பொ.ஆ. 985 ஆம் ஆண்டைச் சேர்ந்த ஒரு கல்வெட்டில் ”தொட்டியத்து கர்மகரணக்காற நாரணன் காகுத்தன்” என்பவர் குறிப்பிடப்படுகிறார் (SII 13, 26). இவர் கணக்குப் பணியுடம் வேறு பணியையும் செய்திருக்கலாம். எனவே கணக்கர்கள் வேறு சில தொடர்புடைய பணிகளையும் செய்தனர் எனக் கருத இடமுண்டு.

கரணத்தான் குசவன்

பானைகள் செய்யும் குயவர்களும் கணக்கர்களாக இருந்துள்ளனர் என்பதை ஒரு கல்வெட்டு உணர்த்துகின்றது. பொ.ஆ. 978 ஆம் ஆண்டுக் கல்வெட்டு “பூங்குடியிலொன்பது மாவரைக் காணி கரணத்தான் குசவனொருவக்கு” (SII 3, 150-151) என்று குறிப்பிடுகிறது. எனவே குறிப்பிட்ட சாதியினர் மட்டுமின்றி குசவர், பிராமணர் ஆகியோரும் கணக்கர்களாக இருந்துள்ளனர் என்பது இதன் வழி

தெளிவாகின்றது. தொழில் மாற்றம், பல தொழில்கள் செய்யும் வழக்கம் இடைக்காலத்தில் இருந்தது எனலாம்.

கரணத் தண்டம்

கரணத்தண்டம் பொ.ஆ. 753 ஆம் ஆண்டுக்கல்வெட்டில் காணப்படுகிறது. இதற்கு நீதி மன்றத்தில் செலுத்தும் தண்டம் என்று அகராதி பொருள் கூறுகிறது (சுப்பிரமணியன் சண்முகம் 2023: 137). இங்கு கரணம் என்பது நீதி மன்றத்தைக் குறிக்கும் சொல் ஆகும்.

10. முடிவுரை

இடைக்கால அளவுமுறைகள் மிகவும் துல்லியமாக இருந்துள்ளன. நிலங்களைத் துல்லியமாக அளந்து உரிய வரியைப் பெறுவதற்கு கணக்கு மிகவும் தேவையானதாக இருந்துள்ளது. இடைக்காலத்தில் பல வகையான அளவுகோல்களும், பல வகையான பரப்பு அலகுகளும் பின்பற்றப்பட்டு வந்துள்ளன. இவற்றைத் தரப்படுத்த திருவுலகளந்தபடி, உலகளந்த எனப்படும் நாடு முழுவதும் தரப்படுத்தும் அளவு முறைகளைக் கொண்டு வந்து 100 குழி கொண்டது ஒரு மா எனவும் 2000 குழிகள் கொண்டது ஒரு வேலி எனவும் சோழர்கள் தரப்படுத்தியுள்ளனர் என்பது திருவாவடுதுறை கல்வெட்டின் வாயிலாக அறியப்பெறுகிறது.

இடைக்கால அரசு நிருவாகத்தில் கணக்கு மிக முக்கிய பங்கு வகித்துள்ளது. ஊரில் உள்ள நிலத்தை அளந்து அவற்றின் வகை, அளவு, தரம், இருப்பிடம், உடைமையாளர் உள்ளிட்ட தகவல்களை ஓலைச்சுவடிகளில் பதிவு செய்தும், தேவையான ஆவணங்களை எழுதுவது உள்ளிட்ட பணிகளை, ஊர், கோயில், நாடு, நகரம், அரசு ஆகிய அமைப்புகளின் கீழ் செயல்பட்ட கணக்கர்கள் செய்து வந்துள்ளனர். இவர்கள் எழுத்தறிவிலும், கணக்கிலும் சிறந்துவிளங்கியுள்ளனர். இவர்களுக்கு ஊதியம் அளிக்கப்பட்டதுடன் வரியும் விதிக்கப்பட்டுள்ளது. ஊர்களில் இவர்களது நியமனமும், கணக்குத் தணிக்கை அமைப்பும், கணக்கு அளிக்காதவர்கள் சபைத் தேர்தலில் பங்கெடுக்ககூடாது என்பதும், இடைக்கால அரசு நல்லதொரு நிருவனமாக இயங்கியுள்ளது என்பதற்குச் சான்றாகும். பல பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் கணக்கர்களாகச் செயல்பட்டுவந்துள்ளனர்.

குறிப்பு:

கணக்கியல் அறிஞர் கு.வெங்கடாசலம் அறக்கட்டளைச் சொற்பொழிவு 18-05-2025 இல் வாசிக்கப்பட்டது. இது 25 மே 2025 அன்று திருத்தப்பட்டபடிவம். இந்த ஆய்விற்கு நல்கை வழங்கிய இந்திய நாட்டு அறிவியல் கழகத்திற்கு (Indian National Science Academy, New Delhi) நன்றி கூறக்கடமைப்பட்டுள்ளேன்.

சான்று நூல்கள்:

முதன்மைச் சான்றுகள்

காரி நாயனார் 1924. கணக்கதிகாரம். பதிப்பாசிரியர் குயப்பேட்டை இராஜு முதலியார், சென்னை

காரி நாயனார். 1958. கணக்கதிகாரம். சென்னை, திருநெல்வேலி சைவ சித்தாந்த நூல் வெளியீட்டுக்கழகம். 1958 ஆம் பதிப்பு.
காரி நாயனார் 1998. கணக்கதிகாரம். தஞ்சாவூர், சரசுவதி மகால் நூலகம். பதிப்பாசிரியர் கா.சத்தியபாமா. 1998 பதிப்பு
தியாகராஜன், இல. 2017. கங்கைகொண்டசோழபுரம் கல்வெட்டுக்கள். கங்கைகொண்டசோழபுரம், கங்கைகொண்டசோழபுரம் வளர்ச்சிக் குழுமம்.
நாவிலிப்பெருமாள் 2004. ஆஸ்தானகோலாகம். தஞ்சாவூர், சரசுவதி மகால் நூலகம். பதிப்பாசிரியர் கா.சத்தியபாமா. 2004 பதிப்பு
மார்க்சீய காந்தி, நா. சீ இராமச்சிந்திரன் 2004 பாபநாசம் வட்டக் கல்வெட்டுகள், தொகுதி 2. சென்னை, தமிழ் நாடு அரசு தொல்லியல் துறை.
வளத்துருவாக்கும் பெருமாள். 2024. கணக்கதிகார ரத்தினச் சுருக்கம். முத்து வெ. பிரகாஷ், குணசேகரன் பாபு (பதிப்பாசிரியர்கள்). புதுச்சேரி. பாம் லீஃப் பிரஸ்.
EI - Epigraphia Indica
SII - South Indian Inscriptions
TAS – Travancore Archaeology Series

இரண்டாம் நிலைச் சான்றுகள்

கோவிந்தராஜன் 1987. கல்வெட்டுச் சொல்லகராதி. மதுரை, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம்.
சண்முகன், கொடுமுடி எஸ். 2006. பழந்தமிழர் பொறியியல் நுட்பத்திறன். சென்னை: மீனா கோபால் பதிப்பகம்
சண்முகம், கொடுமுடி 2022. பழந்தமிழர் கணக்கு – நீட்டல் அளவை. பரிசல், சென்னை
சதாசிவப் பண்டாரத்தார், தி. வை. 2007. ஆராய்ச்சிப் பேரறிஞர் தி. வை. சதாசிவப் பண்டாரத்தார் ஆய்வுகள் 5. சென்னை, தமிழ்மண் பதிப்பகம்.
சுப்பிரமணியன், பா.ரா. ப. சண்முகம் 2023. கல்வெட்டுச் சொற்களின் பொருட் புல அடைவு. செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை.
தகசொ 2002, தமிழ்க் கல்வெட்டுச் சொல்லகராதி. சாந்தி சாதனா, சென்னை
தனசுபா, இரா. 2022. ஒப்பீட்டு நோக்கில் கணக்கதிகாரமும் ஆஸ்தானகோலாகலமும் International Journal of Tamil Language and Literary Studies 5 (1): 72-82.
பகவதி, க. 2003. தமிழர் அளவுகள். சென்னை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
வெங்கடாசலம், கு. 2023. தமிழர் கணக்கியல். மணிமொழி பதிப்பகம், திருவண்ணாமலை

ஆங்கில நூல்கள்

Balasubramanian, R. and J. P. Joshi 2008. Analysis of terracotta scale of Harappan civilization from Kalibangan. Current. Science, 95: 588–589.
Heitzman, J and S. Rajagopal 2004. Urban geography and land measurement in the twelfth century: The case of Kanchipuram. The Indian Economic & Social History Review 41(3):237-268.DOI:10.1177/001946460404100301.

Jagadish, A. and Rajaram Hegde 2012. *Text and practices: Land measure in South India, with special reference to Karnataka.* Seminar SAW: History of Mathematics, History of Economical and Financial Practices 11 May 2012, Land registers and surveyors: Measuring lengths and areas.:
Karashima, N. 2006. Kil in the Description of Land-extent in Chola Inscriptions: Effort to Build a Centralized State by Rajaraja I. *AdhAram* 1: 45-48.
Meenakshi, C. 1938. *Administration and Social Life Under the Pallavas.* Madras, University of Madras
Rangarajan, L.N. 1992. *Kautilya: Arthasastra.* New Delhi, Penguin Books.
Raju, L and V.B. Mainkar 1964 Development of Length and Area Measures in South India. *Metric Measures* 7(2): 3-12.
Sastry, K.A.N. 1955. The Cholas. Madras, University of Madras.
Selvakumar, V. 2014 *Metrological Traditions of South India.* Project Report submitted to Indian National Science Academy. Thanjavur, Tamil University.
Selvakumar, V. 2015. Metrological Traditions of South India. *Indian Journal of History of Science,* 50.2 (2015) 345-356 DOI:10.16943/ijhs/2015/v50i2/48245
Selvakumar, V. 2016. History of Numbers and Fractions and Arithmetic Calculations in the Tamil Region: Some Observations. *HuSS: International Journal of Research in Humanities and Social Sciences,* Vol 3(1), 27–35
Selvakumar, V. 2021. CH. VI Measurement Rods And Linear And Area Measurements In Mediæval Tamil Nadu. In Murugaiyan, Appasamy & Parlier-Renault, Édith (2021) (Eds) *Whispering of Inscriptions: South Indian Epigraphy and Art History: Papers from an International Symposium in memory of Professor Noboru Karashima* (Paris, 12–13 October 2017), pp. Indica Buddhica. Pp. 99-151.
Sen, S.N. and A.K. Bag 1983. *The Sulbasutra of Baudhayana Apastamna, Katyayana and Manava.* New Delhi, Indian National Science Academy
Shanmugam, P. 1987. *The Revenue System of the Cholas 850-1279.* Madras: New Era Publications.
Srinivasan, Saradha 1979. Mensuration in Ancient India, Delhi, Ajanta Publications.
Subbarayalu, Y. 2001a. Land Measurement in Medieval Tamil Nadu. Jn Rajagopal ed. *Kaveri: Studies in Epigraphy, Archaeology and History.* Chennai, Panpattu Veliyittakam, pp.31-40.
Subbarayalu, Y. 2001b. Classification of Land and Assessment of Land tax Jn Rajagopal ed. *Kaveri: Studies in Epigraphy, Archaeology and History.* Chennai, Panpattu Veliyittakam, pp. 53-59.
Subbarayalu, Y. 2001c. Quantifying Land Revenue Assessment of the Chola State. In Rajagopal ed. *Kaveri: Studies in Epigraphy, Archaeology and History.* Chennai, Panpattu Veliyittakam, pp. 65-81.
Subrahmanian, N. 1966. *Pre-Pallavan Tamil Index.* Madras, Madras University. Second edition, 1990.
TVA 2014. *Tamil Fractions and Symbols – Amendment Proposal.* Government of Tamilnadu, India. https://www.unicode.org/L2/L2016/16062-tamil-frac-sym-fdbk.pdf
Venkayya, V. (ed.) 1913. *South Indian Inscriptions* Vol. II Part IV. Madras, Archaeological Survey of India.

புது வரலாற்றுவாதம் (New Historism) மொழித்தொல்லியல் (Linguistic Archaeology) அடிப்படையிலான ஆய்வுத் தேவையும் சாத்தியமும்

இரா.கோமகன்,
தலைவர்,
கங்கைகொண்ட சோழபுரம் மேம்பாட்டு குழுமம்

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் மானுடவியல் மற்றும் சமூக அறிவியல் வகைகளில் குறிப்பிடதக்க அறிவு சார் மாற்றங்கள் நிகழ்ந்தன. இந்தச் சூழலில் புது வரலாற்றுவாதம் *(New Historism)* மற்றும் மொழித்தொல்லியல் *(Linguistic Archeology)* எனும் முக்கிய கல்வித்துறை அணுகுமுறை தோன்றின.

உலகமயமாக்கல் டிஜிட்டல் தொழில்நுட்பத்தின் பெருக்கம் சுற்றுச்சூழல் நெருக்கடிகள், மற்றும் வளர்ந்து வரும் சமூக ஏற்றத்தாழ்வுகள் போன்ற தற்கால சமூக மாற்றங்கள் புதியசிந்தனைகளையும், பழையவற்றின் மீதான விமர்சனங்களையும் அவசியமாக்கின்றன. மாறும் சமூக எதார்த்தங்களுக்கு ஏற்ப நமது சிந்தனை தொடர்ந்து மாற்றத்தைத் தழுவிக்கொண்டது. மாற்றம் ஒன்றே மாறதது என மனிதகுலம் பயணிக்கின்றது.

வளர்ச்சி மற்றும் மாற்றத்திற்கான அடிப்படை உந்து சக்தி, அவற்றின் பொருள் சார் உற்பத்தி முறை ஏற்படும் மாற்றங்களிலேயே தங்கி உள்ளது என்றார் காரல் மார்க்ஸ், இதனால் வாழ்வு உணர்வால் தீர்மானிக்கப்படுவதில்லை, மாறாக உணர்வு வாழ்வால் தீர்மானிக்கப்படுகிறது, நமது உணர்வு என்பது உணர்வுபூர்வமான இருப்பைத் தவிர வேறு ஒன்றும் இல்லை, மேலும் மனிதர்களின் இருப்பு என்பது அவர்களின் உண்மையான வாழ்க்கை செல்முறையாகும் என்கின்றார்".(காரல் மார்க்ஸ் – ஏங்கல்ஸ்:1976, பக்-37)

சமூகம் என்பது ஒரு போதும் நிலையானது அல்ல. அது ஒரு தொடர்ச்சியான இயக்கத்திலும் மாற்றத்திலும் உள்ளது. இந்த மாற்றங்கள் பெரும்பாலும் சமூகத்தின் பொருளாதாரக் கட்டமைப்பில் ஏற்படும் மாற்றங்களில் இருந்து உருவாகின்றன. தொழில்நுட்பங்கள், புதிய உற்பத்திமுறைகள் மற்றும் புதிய சமூக உறவுகள் தோன்றும் பொழுது, அவைத் தவிர்க்கமுடியாமல் மக்களின் வாழ்க்கை முறையையும் அவர்கள் உலகைப் பார்க்கும் விதத்தையும் பாதிக்கின்றன. இந்த சூழலில் பழைய சிந்தனைமுறைகள் நம்பிக்கைகள் மற்றும் சித்தாந்தங்கள் புதிய எதார்த்தங்களுடன் முரண்படத் தொடங்குகின்றன. எனவே மாறும் சமூகங்களுக்கு ஏற்பச் சிந்தனையை மாற்றியமைக்க வேண்டியதன் அவசியம் அதற்கான வழிமுறைகள் முக்கிய விவாத பொருளாகின்றன.

புது வரலாற்றுவாதம் என்பது இலக்கியத்தை அதன் கலாச்சார சூழல் மற்றும் அறிவுசார் வரலாற்றின் ஊடாகவும், அறிவுசார் வரலாற்றை இலக்கியத்தின் ஊடாகவும் அறியமுயலும் ஒரு இலக்கியக் கோட்பாடு அணுகுமுறையாகத் தோன்றியது. இந்த அணுகுமுறை *1980*-களில் அமெரிக்காவில் குறிப்பாக கலிபோர்னியாவில் பல்கலைக்கழகங்களையும் மறுமலர்ச்சி இலக்கிய ஆய்வுகளின் பின்னணியில் தோன்றியது. ஸ்டீபன் கிரீன்பிளாட் *(Stephen Greenblatt)* புது வரலாற்றுவாதத்தின் நிறுவனராக கருதப்படுகிறார். இவரது *"Renaissance Self Fashioning (1980)"* என்ற நூல் இத்துறையின் முக்கிய படைப்புகளில் ஒன்றாகும்.

புது வரலாற்றுவாதம் வரலாற்றிர்க்கும் மற்றும் வரலாற்று எழுத்தியலுக்கும் இடையேயான உறவை மறுபரிசீலனை செய்ய உதவியது. பின் அமைப்பியல் சிந்தனைகள், வரலாற்றின் புறநிலையை தன்மையை எழுத்தியலின் நிலையானப் பொருளையும் கேள்வி உள்ளாகியது.

அதிகாரம் என்பது ஒழுங்கமைவை மையங்கொண்ட அடக்குமுறைச் சக்தி மட்டுமல்ல, அது சமூகம் முழுவதும் பரவியிருக்கும் ஆக்கம் கொண்ட வலையமைப்பு என்றும், அதிகாரம் அறிவை உருவாக்குகிறது, சொல்லாடல்களைக் கட்டுப்படுத்துகிறது. மேலும் தனிமனிதர்களின் நடத்தைகளையும் அடையாளங்களை கூட வடிவமைக்கிறது. *(Michel Foucault: 1977, P-119)* எனும் பூக்கோவின் பின்-அமைப்பியல் சிந்தனை புது வரலாற்று வாதத்தைச் சீரமைத்து.

புது வரலாற்றுவாதத்தின் தோற்றத்தை வெறும் அறிவு சார்ந்த விளைவாக மட்டும் பார்க்க முடியாது. அது *1980*-களின் சமூக மற்றும் அரசியல் இயக்கங்களின் தாக்கங்களையும், அக்காலகட்டத்தில் பல்கலைக்கழகங்களின் உருவான புதிய தலைமுறை பேராசிரியர்களின் ஆர்வங்களையும் பிரதிபலித்து

புது வரலாற்றுவாதம் முதன்மையாக இலக்கியத் திறனாய்வில் வேரூன்றியிருந்தாலும், வரலாறு மற்றும் பண்பாட்டு ஆய்வுகளில் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. அதன் கண்ணோட்டத்தைக் கீழ்காணுமாறு குறிப்பிடலாம்,

அ) இலக்கியத்தை, படைப்புகளை அவற்றின் வரலாறு மற்றும் பண்பாட்டுத் தாக்கத்திலிருந்து பிரிக்க முடியாது.

ஆ) இலக்கியத்திற்கும் வரலாறு அல்லாத பிற சொல்லாடல்களுக்கு இடையிலான வேறுபாட்டையும் வரலாற்றின் புறநிலைத்தன்மையைக் கேள்விக்கு உள்ளாக்கியது

முந்தைய வரலாற்று ஆய்வு அணுகுமுறையில் இருந்து புதிய வரலாற்றுவாதம் வேறுபடுத்தும் கூறுகளை இதன் வழிப்புரிந்து கொள்ளலாம். பண்பாடு என்பது சர்வாதிகாரம் போன்று ஒரு முகப்பட்ட அமைப்பு அல்ல; மாறாக அது பிரதிகளின் உள்ளே பரம்பரை பரம்பரையாகத் தொடர்ந்து வரும் மனப்பாங்குகள் மற்றும் கருதுகோள்களின் பெருக்கல் செயல்பாட்டில் விளைந்த ஒன்றாகும் என்ற கருத்தாக்கத்தில் புது வரலாற்றுவாதம் நிலை கொண்டுள்ளது.

புது வரலாற்றுவாதம் பண்டைய வரலாற்று முறையிலிருந்து மாறுபடும் தளங்களை கோபிசந்த் நாரங் பட்டியலிடுகிறார் : *(கோபிசந்த் நாரங்க்:2005.பக்.542-543)*

1. வரலாறு என்ற சொல்லுக்கு இரண்டு பொருள்கள் உள்ளன. அ) கடந்த கால நிகழ்வுகள் ஆ) கடந்த கால நிகழ்வுகளின் வர்ணனை எனும் உரக்கோவை அல்லது எழுத்தியல் எனும்பொழுது மொழி, அரசியல், அதிகாரம் ஆகியவற்றின் ஆதிக்கத்தால் வரலாறு என்பது பிற்காலத்து மக்களுக்கு மாசற்ற நிலையில் கிடைப்பதில்லை. வரலாறு நிகழ்வுகளின் எடுத்துரைப்பாக (narrative) மாறுவதால் அது நிகழ்வின் அப்பட்டமான உண்மையாக இருப்பதில்லை. இதனால் வரலாறு மொழியால் உருவாக்கப்படும் 'பிரதி'(Text) ஆகின்றது. அதாவது வரலாறு என்பது 'பிரதி ' தான் நிகழ்வு அல்ல.

2. வரலாற்றுக்காலகட்டம் ஒருங்கிணைந்த உண்மையல்ல, எந்த ஒரு காலகட்டத்திலும் 'ஒரே ஒரு வரலாறு ' என்பது இல்லை. வரலாற்று காலகட்டம் பல குரல்கள், பல பண்பாடுகள், பல மக்கள், கூட்டங்கள் கொண்ட ஒன்று; அதிகார வர்க்கம் தன்னலனுக்கு ஏற்ப எடுத்துரைக்கப்பட்ட உரகோவைக் கதையாடலே வரலாறாக அறியப்படுகிறது, மற்றவை மறுதலிக்கப்படுகிறது. வரலாற்றில் காணப்படுகிறது என்றுக் கூறப்படும் ஒரே மாதிரியான ஒருங்கிணைவு கொண்ட பண்பாட்டின் கருதுகோள் வெறும் மாயைதான்.

3. கடந்தகாலம் பற்றிய ஆய்வு கலப்பற்றதும் நூற்றுக்கு நூறு சதவிகிதம் புறவயமானது என்றும் எந்த வரலாற்றுவாதியும் கூறமுடியாது. வரலாற்று ஆய்வாளரான எழுத்தாளர் தன்னுடைய வரலாற்று நிலைமையில் இருந்து விடுபட்டவனாக இல்லாததால் கலங்கமற்ற இட்டுக்கட்டாத உண்மையை கூறுவதில்லை. வரலாற்றெழுத்தியல் கடந்தகால எழுத்தாவணங்கள், தொல்லெச்சக் கூறுகளைக் கொண்டு அமைகின்றது. அவை உருவாக்கப்பட்டக் காலத்திய சமூகப் பண்பாட்டு ஆதிக்கச் சொல்லாடல்களால் கட்டுப்படுத்தப்பட்டவையாகத் தானிருக்கும். எனவே கடந்த கால வரலாறு என்பது நிகழ்காலப் புனைவே.

4. இலக்கியம், இலக்கியமல்லாத சட்டம், அறிவியல் பிரதிகள் எல்லாம் வரலாற்றுக்குள் அடக்கம். வரலாறேப் பிரதித்தனமை உள்ளபொழுது வரலாற்றுச் சொல்லாடல்களில் மலர்வதே இலக்கியம் என்பதால் வரலாற்றின் தளைகளில் கட்டுண்டதாக இலக்கியம்; அதன் வடிவங்களும் அமைந்து விடுகிறது. கடந்த காலத்தின் வர்ணனை மற்றப்பிரதிகளில் இருந்து தன்னுடைய பிரதித்தன்மையை நிறுவுகிறது.

வரலாற்றுக்கு அடிப்படையாக எடுத்தாளப்படும் சான்றுகள் என்பது ஒருவகை சொல்லாடல்தான், புறச்சாறாக அல்லது அகச்சான்றாக இருந்தாலும் வரலாற்றை எழுதுபவனால் அவனது இயங்குதளம், சொல்லாடல்ப் புலம் அனுமதித்த அளவில் எடுத்துரைக்கப்படும் ஒன்று, அதாவது வரலாற்றாளன் தனது நிகழ்காலத்தின் அரசியல், சமூகப்பொருளாதாரம், அதிகாரக்கருத்தியல் கருத்தாக்கங்களால் கட்டமைக்கப்பட்டவனாகத் நிகழ்வதால் அவன் வாழும்காலத்தில் சொல்லாடல் புலத்தின் ஆதிக்கத்திற்கு அகப்பட்டவனாக இருப்பதால் சான்றுகளைத் தான் உள்வாங்கிய, அறிந்தமுறையில் வரலாற்றின் அடிப்படைகளை எடுத்துரைக்கின்றான். ஒரு வரலாற்று நிகழ்வை சான்றுகளைக் காட்டி பொருளுரைக்கின்றான் அதாவது கடந்தகால நிகழ்வை அல்லது கடந்தகால வர்ணனையை நிகழ்கால அரசியல் சொல்லாடல் புலத்தின் அடிப்படையில் பொருள் கொள்ளப்படுகின்றது. இதனால் வரலாற்று நிகழ்வு எடுத்துரைப்புகள் உரைகோவைகள் மாறுபட்டு நிற்கின்றன அல்லது மாறிக்கொண்டே இருக்கின்றன அடித்தெழுதப்படும் பிரதி ஆகின்றன.

இதை விளங்கிக்கொள்ள "சொல்லாடல்" பற்றிய புரிதல் தேவையாகின்றது. ஒவ்வொரு சமூக அமைப்பும் அதற்கான பொது மதிப்பீடுகளை உருவாக்குகின்றன. இப்பொது மதிப்பீடுகள் சமூக அறம் என்ற வகையில் நிறுவப்பட்டது. இச்சமூக அறமதிப்பீடுகள் சொல்லாடல் வழி ஒழுங்கமைகின்றது. இச்சொல்லாடல் புலம் பண்பாட்டை, வரலாற்றை, அரசியலை வழி நடத்துகின்றது. இது மொழியால் சாத்தியமாகிறது மொழியின் விளைவாக சமூகம் இருப்பதால், சமூக அமைப்பு மாற்றங்கள் ஊடாக மொழியும் தன்னை தகவமைத்துக் கொண்டுச் சொல்லாடல்களுக்குத் துணை நிற்கின்றது.

முரண்பாடு என்பது ஒரு உலகளாவிய விதியாகும், பிரபஞ்சத்தில் உள்ள அனைத்து பொருட்கள், நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகள் அனைத்திலும் முரண்பாடுகள் நிலவுகின்றன. இயக்கம் என்பதே ஒரு முரண்பாடு தான் என்று ஏங்கல்ஸ் குறிப்பிடுகிறார். முரண்பாடு இல்லாமல் எதுவும் இருக்க முடியாது இது புவியியலில் (ஈர்ப்பு X விலக்கு; நேர் X எதிர்மின்னூட்டங்கள்) சமூகத்தில் (சுரண்டப்படுவோர் X சுரண்டப்படுவோர்; ஆள்பவர் X ஆளப்படுவோர்) சிந்தனையில் (சரி X தவறு) என வெளிப்படுகிறது.

சொல்லின் எதிர்முரண் பண்பால் பொருளுவாக்கம் நிகழ்கிறது. உண்மை - பொய் என்ற இருமை எதிர்முரணால் சமூக அமைப்பாக்க வரலாற்றை புரிந்து கொள்ள முடியும். புராதானக் காலச்சமூகத்தில் நல்லது - தீயது என வரையறுக்கப்பட்டது, மதங்களின் தர்மங்கள், பாவம்-புண்ணியம் எனும் எதிர்முரண்களால் கட்டமைக்கப்பட்டது. தர்மங்கள் அடிப்படையிலானச் சமூகம், பகுத்தறிவு காலகட்டத்தில் இயங்கியபொழுது நன்மை-தீமை; உண்மை-பொய் எனும் வரையறையில் அமையப்பெற்ற எதிர்முரண், சட்டங்களால் ஆளப்படும் சமூகத்தில் சரி-தவறு என்ற இருமை எதிர்வால் உருவாக்கப்பட்டது.

சமகாலத்திய ஆய்வு அதாவது மொழியின் செயலாக்கம் கொண்ட அமைப்பை விளக்கும் சசூரிய அமைப்புவாதத்தில் மொழியமைப்பு என்பது பண்பாட்டின் தாக்கத்தினால், பண்பாட்டினுள்ளேயே வடிவெடுக்கும் செயற்பாடுதான் என்ற உள்ளார்ந்த பார்வையையும் அடங்கியுள்ளது. புது வரலாற்றுவாதம் இந்த விதையிலிருந்து தான் முளைவிட்டது என்பது தெளிவாக தெரிகிறது (கோபிசந்த் நாரங்க்:2005.பக்- 546)

மொழிவழிக் கட்டமைப்பும் வரலாறு ஆகிறது. மொழி என்பது செயல்தன்மை அல்லது இயக்கமாக இருப்பதால் மொழிவுகளும் அத்தன்மை உடையது, சூழல் சார்ந்து அமைவதேயாகும்

" எல்லா சொல்லும் பொருள் குறித்தனவே "

"பொருட்டுப் பொருள் தெரிதின் அது வரம்பின்றே"

எனும் தொல்காப்பிய சூத்திரங்கள் நம்மை வழிநடத்துகின்றன. சொல் பொருளைக் குறித்தாலும் பொருளை விளக்கிக்கொள்ளப் பிறிதொருச் சொல் தேவைப்படுகிறது. அதாவது சொல்லின் அர்த்தம் பிறிதொருச் சொல்லால் ஆனது என்பதால் இச்சங்கிலித்தொடர் நிகழ்விற்கு எல்லை இல்லை. வரலாற்றுச்சான்றை விவரித்துரைப்பது என்பது பிறிதொரு மொழிதல் தான். அப்பிறிதொரு மொழிதல் மொழிபவனின் தற்சார்பு கொண்டாத அமைகிறது. இந்த தற்சார்பு நிகழ்காலச் சொல்லாடல் புலத்தால் கட்டமைக்கப்படுகிறது.

வரலாற்றின் உரைத்தன்மை மற்றும் உரைகளின் வரலாற்று தன்மை (*Textuality of History and History of Textuality*) என்பது லூயிஸ் மான்ட்ரோஸ் (*Louis Montrose*) என்பவரால் பிரபலப்படுத்தப்பட்டக் கருத்து.(*H. Aram Veeser:1989*). இக்கருத்து புது வரலாற்றுவாதத்தின் செல்வாக்கு பெற்ற பகுதி. “உரைகளின் வரலாற்று தன்மை” என்பது அனைத்து வடிவங்களும் சமூகரீதியாக பொதிந்துள்ளன என்பதாகும். அவை வெறுமனே ஆசிரியரின் கற்பனை விளைவுகள் அல்ல. மாறாக குறிப்பிட்ட வரலாறு மற்றும் சமூகச் சக்திகளின் தயாரிப்புகள். “வரலாற்றின் உரைத்தன்மை “ என்பது வரலாறானது கடந்தகால நிகழ்வுகளின் நேரடிப் பிரதிபலிப்பு அல்ல, மாறாக அதுவும் உரைகளைப் போலவே விளக்கத்திற்கும் பகுப்பாய்வுக்கும் உட்பட்டது. என்பதை குறிக்கிறது. வரலாற்றை நாம் அணுகுவதுப் பெரும்பாலும் எழுதப்பட்ட ஆவணங்கள் மூலமாகவே உள்ளது. மேலும் அந்த ஆவணங்களும் வரலாற்று ஆசிரியர்களின் விளக்கங்களும் கூட அவர்களின் சொந்தச் சார்புகளையும் கட்டமைப்புகளையும் கொண்டுள்ளன.

இதை விளங்கிக்கொள்ள சோழவரலாற்று உரைக்கோவைகளை அணுகிப் பார்க்கலாம். இடைக்காலச்சோழர் வரலாற்று எழுத்தியலில் முன்னோடி கே.எ. நீலகண்டசாஸ்திரியார், அவரைத் தொடர்ந்து பர்ட்டன் ஸ்டெயின், நெபுரு கராஷிமா, ஒய்.சுப்பராயலு, ஜம்பகலட்சுமி, ஜார்ஜ் டபில்யூ.ஸ்பென்ஸர் போன்றவர்கள் ஆய்வுரை வழங்கி உள்ளனர். அவை ஒன்றுக்கொன்று முரண்பட்ட பார்வை கொண்ட உரைக்கோவைகள். அவற்றைக் கீழ்க்கண்டவாறு அட்டவணைப் படுத்தியுள்ளேன்

ஆய்வுப் பார்வை	**தகவல்**	**முக்கிய ஆதரவாளர்கள்**
மையப்படுத்தப்பட்ட பேரரசு	மிகவும் மையப்படுத்தப்பட்ட, அதிகாரத்துவப்பேரரசு, திறமையான நிர்வாகம், விரிவான வருவாய் அமைப்பு, வலுவான கட்டாய அமைப்புகள்	கே.ஏ.நீலகண்ட சாஸ்திரி:*2000*
பிரிவுபடுத்தப்பட்ட அரசு	அரசியல் அதிகாரம் உள்ளூர் மயமாக்கப்பட்டது (*நாடு* பிரிவுகள்), மன்னர் பெயரளவில் சடங்கு ரீதியான இறையாண்மையைக் கொண்டிருந்தார், இரட்டை இறையாண்மை (அரசியல் மற்றும் சடங்கு), பல அதிகார மையங்கள்	பர்டன் ஸ்டெயின் *:1980*

ஆரம்பகால அரசு	சோழர் இராச்சியம் ஆரம்பகால அரசு, கிராமப்புற உயரடுக்கின் அபிலாஷைகளை வழிநடத்தும் நிறுவனங்கள், விவசாய அடிப்படை, நிலப்பிரபுக்களின் அரசியல் அதிகாரம் வளர்ச்சியின் ஆரம்ப கட்டத்தில் இருந்தது	ஒய். சுப்பராயலு;*1973* , ஜேம்ஸ் ஹெய்ஸ்மேன்
நிலப்பிரபுத்துவ அரசு	சோழர் இராச்சியம் நிலப்பிரபுத்துவ அரசு, நிலப்பிரபுத்துவ சக்திகளின் புத்துயிர்ப்பு வீழ்ச்சிக்குக் காரணம், பிராமணர்கள் மற்றும் மத நிறுவனங்களுக்கு நில மானியங்கள் வழங்கியது நிலப்பிரபுத்துவத்திற்கு வழிவகுத்தது	கேசவன் வேலுத்தட்:*1993* , ஆர்.எஸ். ஷர்மா *:2001*

சோழர்கால வரலாறு கூறும் நான்குப் பிரதிகள் இன்று உள்ளன. ஒன்றோடு ஒன்று மாறுபட்டப் பிரதிகள் இப்பிரதிகள் கல்வெட்டுக்கள், இலக்கியம், தொல்லியல் சான்றுகள் ஆகியவை சான்றாக கொண்டுள்ளன. சோழர் காலச் சான்றாவணங்களே அது உருவாக்கப்பட்டக் காலத்தின் சொல்லாடல்புலத்தாலும் அரசியல், சமூகப் பொருளாதார, அதிகாரம் அனுமதித்த அளவிலேயே உருவானவைகளான இருக்கின்றன. அதை அடிப்படையாகக் கொண்டு இப்பிரதிகள் உருவாக்கப்படுகின்றன அல்லது எடுத்துரைக்கப்பட்டன.

சோழர் வரலாறு என்பது நிகழ்வு என்பதை விட அது வர்ணனையாகவே வந்தடைந்துள்ளது. மதுராந்தகன், பாண்டிய குலாசனி, சளுக்கியகுலாசனி, திருமகள் போல இரு நிலமடந்தையையும் தனக்கேயுரிமை பூண்ட போன்ற மொழிவுகள் கட்டமைக்கப்பட்டு அரசியல் அதிகாரம் அனுமதித்த அளவிலேயே தான் பிரதிகள் உருவாகின என்பதற்கு சான்றாக அண்மையில் இந்திய மத்திய பள்ளிகள் பாடத்திட்டத்தில் *(NCERT-National Council of Education Research and Training) 12*-ம் வகுப்பு சமூகவியல் பாடத்தில் முகலாய வரலாற்றுப்பாடத்தில் மன்னர்களும் வரலாறும் எனும் அத்தியாயமாகும். முகலாய நீதிமன்றங்கள் (அத்தியாயம்: *16 &17*) என்பது நீக்கப்பட்டதோடு ஏழாம்வகுப்புப் பாடத்தில் முகலாயரும் டெல்லி சுல்தான்களும் அத்தியாயம் நீக்கப்பட்டிருப்பதைச் சுட்டலாம். *(The Economic Times: April-28th,2025)*

இந்தியாவில் சிந்துவெளி நாகரிகக் கதையாடலில் மொழி விவாதம் திராவிடம் மற்றும் இந்தோ-ஆரியம் அடிப்படையில் தெற்காசியாவில் தற்கால அரசியல் மற்றும் கலாச்சார அடையாள விவரிப்புகளுடன்

பின்னிப்பிணைந்துள்ளது. சிந்துவெளியை வேத/சமஸ்கிருத கலாச்சாரத்துடன் தொடர்புபடுத்தும் முயற்சிக்கும் திராவிடமரபிற்கும் எதிரான போட்டிக்கு நிகழ்காலச் சொல்லாடல்களின் தாக்கம் உள்ளது. நிகழ்கால அரசியல் சொல்லாடல்களால் அப்பிரதிகள் அமைகின்றன. பலப் பிரதிகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

சிந்துவெளிப்பண்பாட்டு பற்றிய எடுத்துரைப்புகளை, இப்பண்பாட்டின் தோற்றம், மொழி, வீழ்ச்சி, சமூக அமைப்பு பற்றியக் கதையாடலாகப் பத்திப்பிரித்துப் பார்த்தால் பலவாறாக உள்ளதை அறியமுடியும்.

அம்சம்	முக்கிய கோட்பாடு/ கருதுகோள்	முக்கிய ஆதரவாளர்கள்/ அறிஞர்கள்	முதன்மைச் சான்றுகள்	முக்கிய எதிர்வாதங்கள் / சவால்கள் / மாற்றுப் பார்வைகள்
தோற்றம்	உள்நாட்டுப் பரிணாமம்	கிரிகோரி போசெல்	மெஹர்கர் போன்ற தளங்களில் தொல்பொருள் தொடர்ச்சி, விவசாய வளர்ச்சி	வெளிப்புறத் தொடர்புகளின் பங்கை குறைத்து மதிப்பிடல்
	மெசப்பொத்தமிய செல்வாக்கு	ஷெரீன் ரத்னாகர்	வர்த்தகப்பொருட்கள், பொருள்சார் கலாச்சார ஒற்றுமைகள்	நேரடித் தோற்றத்திற்குப் பதிலாக தொடர்பு மற்றும் பரிமாற்றத்திற்கானச் சான்றுகள் அதிகம்
	குமரிக் கண்டம்	பாவாணர்	பிற்காலத் தமிழிலக்கிய ஆதாரங்கள்	தொல்பொருள் சான்றுகளுடன் முரண்பாடு, இலக்கிய ஆதாரங்களின் பிற்காலத் தன்மை
மொழி	திராவிட மொழி (தொல்-திராவிடம்)	அஸ்கோ பர்போலா,. மகாதேவன், ஆர்.பால கிருஷ்ணன்	எழுத்துப் பகுப்பாய்வு (ரெபஸ்), கடன் சொற்கள், இடப்பெயர்கள், மரபணுச் சான்றுகள் (ராகிகர்கி), கலாச்சார ஒற்றுமைகள் [7]	எழுத்துக்கள் புரிந்துகொள்ளப்படவில்லை, மாற்று விளக்கங்கள் சாத்தியம்
	இந்தோ-ஆரிய மொழி (ஆரம்ப சமஸ்கிருதம்)	எஸ்.ஆர். ராவ்	செமிடிக் எழுத்துக்களுடன் ஒலிப்பு ஒற்றுமைகள், வேத சமஸ்கிருதத்துடன் தொடர்புகள்	முறைசார்ந்த விமர்சனங்கள், மரபணுச் சான்றுகளுடன் முரண்பாடு
	ஈலமோ-திராவிடம்	டேவிட் மெக்ஆல்பின்	ஈலமைட் மற்றும் திராவிடத்திற்கு இடையிலான மொழியியல் தொடர்புகள்	கருதுகோள் நிலை, நேரடி ஹரப்பா சான்றுகள் குறைவு
எழுத்து முறை	மொழியியல் அமைப்பு (சொல்-அசை)	பர்போலா, மகாதேவன், ராவ்	புள்ளியியல் வடிவங்கள் (எண்ட்ரோபி), குறியீடு	கல்வெட்டுகளின் சுருக்கம், குறியீடுகளின்

			வரிசை, சிக்கலான தன்மை	பொருள் நிச்சயமற்றது
	மொழி அல்லாத குறியீட்டு முறை	ஃபார்மர், ஸ்ப்ரோட், விட்செல்	கல்வெட்டுகளின் சுருக்கம், நீண்ட உரைகள் இல்லாமை, குறியீடுகளின் மீண்டும் வரும் தன்மை	புள்ளியியல் பகுப்பாய்வு மொழியியல் அமைப்பைக் குறிக்கிறது
	வணிக / ஹால் மார்க்கிங் குறியீடுகள்	முகோ பாத்யாய், மோகன்	வர்த்தகப் பொருட்களில் குறியீடுகள், பல்வேறு பேச்சுவழக்குகளில் புரிந்துகொள்ளும் தேவை	குறியீடுகளின் சிக்கலான தன்மையை முழுமையாக விளக்காது
வீழ்ச்சி	காலநிலை மாற்றம் (பருவமழை, நதிகள்)	மாலிக், அகர்வால், சூட், டேல்ஸ், வத்சா, லாம்ப்ரிக்ஸ்	பழங்கால காலநிலை தரவு, காகர்-ஹக்ரா வறட்சி, விவசாயத் தோல்வி	பிற காரணிகளின் பங்களிப்பு (வர்த்தகம்,உள்மோதல்கள்) சாத்தியம்
	ஆரியப் படையெடுப்பு	வீலர், கார்டன் சைல்ட்	மொகஞ்சதாரோ எலும்புக்கூடுகள் (ஆரம்ப விளக்கம்)	பரவலான அழிவுக்கான சான்றுகள் இல்லை, எலும்புக்கூடுகள் மறுவிளக்கம், இடம்பெயர்வு கோட்பாடு மாற்றாக உள்ளது
	வர்த்தக வீழ்ச்சி	(பல்வேறு அறிஞர்கள்)	மெசொப்பொத் தேமியாவுடனான வர்த்தகம் குறைதல்	வீழ்ச்சிக்கான முதன்மைக் காரணமா அல்லது விளைவா என்பது விவாதம்
	பிற காரணிகள் (வெள்ளம், பூகம்பம், நோய், சூழலியல் சீரழிவு)	மெக்கே, ராவ், ரைக்ஸ், டேல்ஸ், கென்னடி, ஃ பேர்சைல்ட்	உள்ளூர் தொல்பொருள் சான்றுகள், எலும்புக்கூடு ஆய்வுகள்	இவை பெரும்பாலும் துணை அல்லது உள்ளூர் காரணிகளாகக் கருதப்படுகின்றன

சமூக அமைப்பு	படிநிலை (வர்க்கம்/சாதி போன்றது)	ஜம்கேத்கர்	நகரப் பிரிவுகள், புதைகுழி வேறுபாடுகள், ஆடம்பரப் பொருட்கள்	பிற்காலக் கருத்துக்களைத் திணித்தல் (காலப்பிழை), சான்றுகளின் தெளிவின்மை
	நகர-மாநிலங்கள்/ பிராந்திய அரசுகள் (படிநிலை அல்லாதது)	கெனோயர், போசெல்	அரண்மனைகள்/அரச கல்லறைகள் இல்லாமை, பிராந்திய வேறுபாடு	சீரான தன்மை (எடைகள், திட்டமிடல்) ஒருவித மையக் கட்டுப்பாட்டைக் குறிக்கிறது
	உயரடுக்கு/ கழகங்களால் ஆளப்பட்டது	(பல்வேறு அறிஞர்கள்)	இராணுவச் சான்றுகள் குறைவு, வர்த்தகம்/மதத்தின் முக்கியத்துவம்	அதிகாரக் கட்டமைப்பின் சரியான தன்மை அறியப்படவில் லை
	தாய்வழி சமூகம்	(சில விளக்கங்கள்)	தாய் தெய்வ வழிபாடு, பெண்களின் நிலை குறித்த அனுமானங்கள்	உறுதியான சான்றுகள் குறைவு, பெரும்பாலும் அனுமானம்

17-ஆம் நூற்றாண்டின் பிரெஞ்சு தத்துவஞானியும் கணிதவியலாளருமான ரெனோ டெக்கார்டே (Rene Descartes) எழுச்சியுடன், பகுத்தறிவின் பங்கு கோட்பாடு ஒரு புதிய புரட்சிகரமான முக்கியத்துவத்தை பெற்றது. டெக்கார்டேவின் தத்துவமான "கார்டீசிய தர்க்கவாதம்" அறிவின் அடித்தளங்கள், எதார்த்தத்தின் தன்மை மற்றும் மனிதனின் இடம் பற்றியப் பாரம்பரியக் கருத்துக்களை ஆழமாகக் கேள்விக்குள்ளாக்கியது.

ரேனே டெக்கார்டேவின் முறைப்படுத்தப்பட்ட சந்தேகம்(Methodical Doubt) என்ற ஒரு தனித்துவமான வழிமுறையைப் பயன்படுத்தினார். இது ஒரு தீவிரமான ஐயுறுவாத நிலைப்பாடு அல்ல; மாறாக சந்தேகிக்க முடியாத, உண்மையை அடைவதற்கான ஒரு கருவி அல்லது வழிமுறையாகும். முறைப்படுத்தப்பட்ட சந்தேகத்தின் தீவிரமான செயல்முறையின் முடிவில், டெக்கார்டே தனது முதல் மற்றும் மறுக்க முடியாத உண்மையைக் கண்டறிந்தார் "நான் சிந்திக்கிறேன் ஆகையால் நான் இருக்கிறேன்" என்றார். சந்தேகிப்பது என்பது ஒருவகையான சிந்தனை. சிந்தனை நிகழ வேண்டுமானால், சிந்திப்பதற்கு ஒருநபர் அல்லது ஒருபொருள் இருக்க வேண்டும். எனவே அவர் சந்தேகிக்கும் அந்த தருணத்திலேயே அவர் சிந்திக்கும் ஒருபொருளாகவும் இருக்கிறார் என்பது மறுக்க முடியாத உண்மையாகிறது. நான் சிந்திக்கிறேன் ஆகையால் நான் இருக்கிறேன் என்று குறிப்பிடுகிறார்.

டெக்கார்டேயின் தத்துவத்தில் மிகவும் பிரபலமான மற்றும் விவாதத்துக்குரிய அம்சங்களில் ஒன்று, அவரது மனம்-உடல் இருமைவாதம் (Mind-Body dualism) ஆகும். இதன்படி பிரபஞ்சம் இரண்டு வகை அடிப்படையிலானப் பொருட்களாலனது மனம் மற்றும் உடல் இவையிரண்டும் முற்றிலும் வேறுபட்ட இயல்புகளைக் கொண்டவை, ஒன்றிலிருந்து மற்றொன்று சுயதீனமாக இருக்கக் கூடியவை. மனதை ஒரு சிந்திக்கும் நீட்சியடைந்த பொருளாகவும் உடலை நீட்சியுடைய சிந்தனையற்றப் பொருளாய் அவர் தனித்துவத்துடன் சிந்தித்தார்.

ரெனே டெக்கார்டின் "கார்டீசிய" தர்க்கவாதத்தை பற்றிய குறிப்பிட வேண்டியுள்ளது ஏனெனில், அவரது பகுத்தறிவுவாதம் 17 -18 ஆம் நூற்றாண்டில் மேற்கத்தியச் சிந்தனையில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்த தாக்கம் பதினெட்டாம் நூற்றாண்டின் உச்சம் பெற்ற அறிவொளிகாலச் சிந்தனையுடன் பின்னிப்பிணைந்து வரலாற்று ஆய்வு மற்றும் வரலாற்று வரைவியல் ஆகியவற்றில் அணுகுமுறைகளை மாற்றி அமைத்தது.

கார்டீசியத்தர்க்கவாதம் அறிவொளிகாலத்திற்கு ஒரு குறிப்பிட்ட முறைமையை வழங்கியது. இதுவெறும் தத்துவ உள்ளடக்கத்தைப்பற்றியது மட்டுமல்ல, உண்மையை எப்படியடைவது அதை நம்புவது மற்றும் அறிவை எவ்வாறு கட்டமைப்பது என்பதைத் தீர்மானிக்கும் ஒரு செயல்முறையை ஆகும்.

கார்டீசிய தர்க்கவாதத்தின் தாக்கத்தால் வரலாற்று நிகழ்வுகளுக்கான விளக்கங்களில் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டது. இயற்கைக்கு அப்பாற்பட்டச் சக்திகள், தெய்வீகத் தலையீடு, அற்புதங்கள் அல்லது விதி போன்ற காரணங்களைக் குறைத்து மதிப்பிட்டு அதற்குப்பதிலாக, பகுத்தறிவுச் சார்ந்த இவ்வுலகக் காரணங்களை (Wordly Explanations) வழங்குவதில் கவனம் செலுத்தப்பட்டது.

வரலாற்று நிகழ்வுகளை மனிதர்களின் செயல்கள், அரசியல் நகர்வுகள், சமூக மற்றும் பொருளாதார நிலைமைகள், புவியியல் காரணிகள் போன்ற கவனிக்க கூடிய

மற்றும் பகுப்பாய்வுச் செய்யக்கூடியக் காரணிகள் விளைவாகப் பார்க்கப்பட்டன. மத நம்பிக்கைகள் மற்றும் மதநிறுவனங்களின் பங்கு கூட தெய்வீக வெளிப்பாடுகளாகக் கருதப்படாமல் அரசியல், உளவியல் காரணிகளின் அடிப்படையில் பகுத்தறிவுடன் விளக்கமுறப்பட்டது. வரலாறு என்பது மனிதர்கள் இயற்கைச்சக்திகள் செயல்பாடுகளால் இயக்கப்படும் ஒரு செயல்முறையாக பார்க்கப்பட்டது. இந்த மாற்றம் மனித ஆற்றலுக்கு வரலாற்றில் ஒரு மைய இடத்தை கொடுத்ததுடன் வரலாற்று ஆய்வை பகுத்தறிவு மற்றும் அனுபவ ஆதாரங்களின் அடிப்படையில் அணுகப்படும் ஒரு துறையாக வலுப்படுத்தியது.

இதன் அடிப்படையில் வரலாறு எழுத்துவரைவியல் அமைந்து பல வரலாறுகள் எழுதப்பட்டன. மனிதவரலாறு நேர்கோட்டு தன்மையில் *(Linear progression)* ஒரு தொடர்ச்சியான மேல்நோக்கிய இயக்கமாகும். அது அறியாமை, காட்டுமிராண்டித்தனம், மூடநம்பிக்கை மற்றும் ஒடுக்குமுறை ஆகியவற்றின் நிலையிலிருந்து படிப்படியாக பகுத்தறிவு, அறிவியலறிவு, சகிப்புத்தன்மை, சுதந்திரம் மற்றும் நாகரிகத்தை நோக்கி நகர்கிறது எனும் அடிப்படையில் அமைந்திருந்தன.

20-ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய பின்நவீனத்துவம் அறிவொளிக் காலத்தின் அடிப்படைக் கொள்கைகளையும் அதன் விளைவாக அமைந்த நவீன வரைவியலையும் மிகத்தீவிரமாக விமர்சித்தது. பின்நவீனத்துவம் அறிவொளியின் மையக்கருத்துகளான புறநிலையுண்மை, உலகளாவியப் பகுத்தறிவு, நேர்கோட்டுக் முன்னேற்றம் கருத்தை 'பெரும் விவரிப்புகள்' என்று கூறி நிராகரித்தது. இந்தப் பெரும்விவரிப்புகள் எதார்த்தத்தை முழுமையாகப் பிரதிபலிப்பதில்லை என்றும் அவைப் பெரும்பாலும் அதிகாரத்தில் இருப்பவர்களின் நலன்களுக்குச் சேவை செய்கின்றன என்றும் வாதிடுகிறது.

வரலாற்று அறிவு என்பது கடந்த காலத்தின் புறநிலைப் பிரதிபலிப்பு அல்ல, மாறாக அது ஒரு மொழி, கலாச்சாரம், சமூகக்கட்டமைப்பு மற்றும் அதிகார உறவுகளால் 31 | Page வடிவமைக்கப்படும் ஒரு கட்டுமானம் என்று பின்நவீனத்துவம் கருதுகிறது. உண்மை என்பது நிலையானதல்ல அது விளக்கத்திற்குட்பட்டதோடு பலதரப்பட்டதும் ஆகும் என்றது.

வரலாற்று ஆசிரியர்களின் தங்களது சொந்தப்பின்னணி, மொழி மற்றும் தப்பெண்ணங்களில் இருந்து முழுமையாக விடுபட முடியாது எனவே முற்றிலும் புறநிலையான வரலாற்றுப் பார்வை என்பது சாத்தியமற்றது என்பதுதான் பின்-நவீனத்துவத்தின் நிலைப்பாடு. ஒவ்வொரு வரலாற்று விவரிப்பும் ஒரு குறிப்பிட்ட கண்ணோட்டத்தையேப் பிரதிபலிக்கிறது. வரலாற்று எழுத்து என்பது அதிகாரத்தின் ஒரு வடிவம் என்றும் அது பெரும்பாலும் ஆதிக்கக்குழுக்களின் கதைகளை முன்னிலைப்படுத்தி விளிம்புநிலை மக்களை (பெண்கள் சிறுபான்மையினர் உழைக்கும் ஒடுக்கப்பட்டவர்கள்) மறைக்கிறது அல்லது சிதைக்கிறது என்று விமர்சிக்கிறது. இது அறிவொளி வரலாற்று வரவியலின் உலகளாவிய மற்றும் புறநிலை உரிமை கோரல்களின் பின்னால் உள்ள அனுமானங்களையும் அதன் சாத்தியமான குறைபாடுகளையும் வெளிச்சத்திற்கு கொண்டு வந்துள்ளது.

இந்திய வரலாற்று எழுதுதல் 18 -19 ஆம் நூற்றாண்டுகளில் மேற்கத்திய மாதிரிகளின் செல்வாக்கின் கீழ் உருவானது. அது கீழ்காணும் அடிப்படைகளில் வரையப்பட்டது

A) ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பின் (தேசம் -பிராந்தியம்) வரலாற்றை எழுதுதல்.

B) புறவயமான அடிப்படையில் பொதுவான வரலாற்றை வழங்குதல்.

C) அரசியல் வரலாற்றுக்கு முன்னுரிமை அளித்துப் பண்பாட்டு வரலாற்றை அதன் பகுதியாகக் கருதுதல்.

D) ஒரு குறிப்பிட்ட வரலாற்றை உலகவரலாற்றின் ஒரு பகுதியாக இணைத்தல் .

இதன் தேவைக்காக குலங்கள் குடிகள் விவரங்கள் தொகுக்கப்பட்டன. தொல்லியல் அகழ்வாய்வுகள், கல்வெட்டுக்குறிப்புகள் தொகுப்புகள் பரந்த நிலப்பரப்பின் நில அளவையும், மொழிவரலாறும் நீர்வழித்தடங்கள் போன்றவை வரையறுக்கப்பட்டு இந்தியதேசம் எனும் பெரும்நிலப்பரப்பு உருவாக்கப்பட்டது. உலகவரைபடத் தொகுப்பில் ஆட்கொள்ளப்பட்டது.

இலக்கியக் கோட்பாட்டளரும் பின் – நவீனத்துவ விமர்சகருமான ஜமாலன் அவர்கள் இந்திய வரலாற்றெழுதுதலை விமர்சிக்கிறார்:

“இந்திய வரலாறு எழுதுதல் என்பது காலணியக் காலத்திலேயேத் தொடங்கப்பட்டது. உலக வரலாறு என்பதே 18 -19 ஆம் நூற்றாண்டின் கண்டுபிடிப்பு தான். அதன் ஓர் அங்கமாகக் காலணியவாதிகளால் எழுதுவதற்கு உட்பட்ட இந்தியவரலாறு பெரியதொரு வகையில் இந்தியதேச உருவாக்கத்திற்கு அடிப்படையாக அமைந்தது. உலகவரைபடங்கள் உருவாக்கப்பட்டதற்கான காலணிய அரசியலுடன் இந்திய வரைபட உருவாக்கமும் நிகழ்கிறது. இதன் விளைவாக உலகின் முக்கிய அறிவுத்துறைகளான மானுடவியல் வரலாற்றில் தொல்பொருளியல், அகழாய்வு போன்றவற்றின் உருவாக்கமும், அறிவுத்துறைப் பரவலாக்கமும் நிகழ்கிறது. அதாவது உலகநாடுகளைக் கண்டுபிடிக்கும் ‘மகத்தான வேலையை’ முடித்துக்கொண்டு கண்டுபிடிக்கப்பட்ட நாடுகளின் வரலாற்றை உருவாக்கும் ‘திருப்பணியை’ துவங்கின. காலணிய அரசுகள் இதன் ஓர் அங்கமாகவே இந்திய நிலப்பகுதியை அகழும் பணியைத் துவங்குகின்றன. இந்த அகழ்வாய்வுகளை ஒட்டி ஒரு இந்தியவரலாறு, நாகரிகம் (சிந்து) பற்றிய சொல்லாடல்கள் உருவாகின்றன. இவ்வாறாக இந்தியா பற்றிய பல வரலாற்றுக்கான சாத்தியங்கள் திறந்துவிடப்பட்டன.

இதன் அடிப்படையில் இந்தியவராற்றை நான்காகப் பிரிக்கலாம்:

1. *மேற்கித்திய கார்டீசியவாதத்தை அடிப்படையாகக் கொண்ட வரலாறு.*
2. *பிராமணர்களால் உருவாக்கப்பட்ட அல்லது தொன்மங்கள் அடிப்படையிலான வரலாறு.*
3. *இந்தியாவில் உள்ள எண்ணற்ற சாதிகள் தங்களுக்கென்று உருவாக்கிக்கொண்டு காத்துவரும் வரலாறு.*
4. *இன்றும் வழிபாடாக, சடங்காக, சம்பிரதாயமாக இருந்து வரும் நாட்டுப்புற வரலாற்றுத் தொடர்கள்.*

இந்திய காலணிநாடாக இருந்த 40-களில் நம் சமூகத்தில் பிரதானமாக இயங்கிய இரண்டு வரலாறுகள், ஒன்று; காலணிவாதிகளால் உருவாக்கித் தரப்பட்டது. பிறிதொன்று காந்தி, கோகலே போன்றத் தேசியத் தலைவர்களால் முன்வைக்கப்பட்டத் தொன்மங்கள் அடிப்படையிலான மாற்று வரலாறு.” (ஜமாலன்:2013.பக்.29-30)

இன்றைய இந்திய வரலாறு பண்பாட்டுகளின் அரசியல் சொல்லாடல் புலத்தினால் பெருமிதங்களை உருவாக்கி அதன் வழி தேசியத்தைக் கட்டமைக்க முயல்கிறது. மதவழிதேசியம், இனவழிதேசியம் அதன் அரசியல் சொல்லாடல்புலம் அனுமதித்த எல்லையில் நின்று கடந்தகாலத்தை நினைவாகவும் எதிர்காலத்தை கனவாகவும் வாசிக்க உந்துகிறது. ஆரியம் X திராவிடம்; வடக்கு X தெற்கு; திராவிடம் X தமிழ் அரசியல் சொல்லாடல்புலத்தின் விவரிப்புகள் உரைக்கோவையாகின்றன. அண்மையில் இந்திய மத்திய பள்ளிகள் பாடத்திட்டத்தில் (NCERT-National Council of Education Research and Training) 12-ம் வகுப்பு சமூகவியல் பாடத்தில் முகலாய வரலாற்றுப்பாடத்தில் மன்னர்களும் வரலாறும்,மொகலாய நீதிமன்றங்கள் பாத்திட்டங்கள் மாற்றப்பட்டது, இந்தியவரலாறு இனி தமிழகத்திலிருந்து தான் எழுதப்படவேண்டும் எனும் குரல்களும், சிந்துவெளி நாகரிகம் தமிழ்நாகரிகம் எனும் கருத்தியல் போக்குகள் மூலம் சான்றுகாட்டலாம்.

மொழிதான் சமூகத்தைக் கட்டமைக்கிறது. வாழும் நிலபுலத்துடனான உறவிற்கு மொழி தான் அடிப்படை.,மொழியின் விளைவா சமூகம் அல்லது சமூகத்தின் விளைவா மொழி என்றால் மொழிதான் சமூகத்தைக் கட்டமைக்கிறது. மொழி ஒன்றிர்க்கும் மேற்பட்ட உடல்களை இணைத்துகூட்டித் தொகுப்பாக்கி மனிதர்களைச் சமூகமாக்குகின்றது. மொழியில்லாவிட்டாலும் மனிதக் கூட்டம் வாழும், மக்கள் இருப்பார்கள் ஆனால் சமூகம் இருக்காது. வாழும் நிலபுலத்துடனான உறவிற்கு மொழிதான் அடிப்படை, மக்கள் தொகுப்பாகிய சமூகம் அது வாழும் நிலபுலனோடு வேர்விட்டு விரிவாக மொழியே முதன்மைக் காரணியாகிறது. சமூக அமைப்புகளின் வளர்ச்சியோடு மொழியும் வளர்ச்சிதை மாற்றம் கொள்கிறது என்பது அமைப்பியல்வாத அணுகுமுறையாகும்.

மனிதர்கள் தான் வரலாற்றை உருவாக்குகிறார்கள். அந்த மனிதர்களைக் கட்டமைப்பது மொழி, மனிதர்களின் நினைவாக இருக்கும் மொழி அதை அனுபவ மாக்கி செய்தியாகப் பதிவு செய்து தன் செயலியக்கத்தைத் தொடர்வதால் வரலாறு எனும் காலத்தின் அசைவியக்கத் தொகுப்பு நிலத்தோடு ஊன்றப்பட்டு, நிலத்தின் உறுப்பாக மனிதர்கள் மாற்றப்படுகின்றனர். புறயமான நிலத்தை மனிதருக்குள் அகவயப்படுத்தும் முறையில் தோன்றிய மொழி அதன் தொடர் வினையாற்றலால் நிலத்தின் அகவயமாக மனிதனை மாற்றி விட்டது.

“மொழி என்பது சமூக மேல்கட்டுமானங்களிலிருந்து முற்றிலும் வேறுபட்டது. மொழி என்பது பழைய அல்லது புதிய சமூகத்தின் விளைபொருள் அல்ல. மாறாக வரலாற்று ரீதியாக பல நூற்றாண்டுகள் கடந்து வந்த சமூகத்தின் அடிப்படை விளைவாகும். இது ஒரு சிலரால் அன்றி ஒட்டுமொத்தச் சமூகத்தால் நூற்றுக்கணக்கானத் தலைமுறையினரால் உருவாக்கப்பட்டது. தனித்தொரு பிரிவால் மட்டுமின்றி ஒட்டுமொத்த மக்களின் தேவைகளுக்காகனது. எனவே மொழியின் செயல்பாடு மனிதர்களுக்கு இடையில் உறவை ஏற்படுத்தி ஒரு வர்க்கத்திற்கு மட்டுமின்றி ஒட்டுமொத்த சமூகத்திற்கு பொதுவானதாக மொழி அமைந்துள்ளது. உண்மையில் மொழி பழைய, புதிய சமூகஅமைப்பின் கட்டுமானங்களும் மேற்கட்டுமானங்களும் பொதுவானதாக சுரண்டப்படுவோர், சுரண்டுபவர்களுக்குப் பொதுவானதாக அமைந்துள்ளது” (ஜே.வி.ஸ்டாலின்:1950).

தமிழ்ச்சமூக உருவாக்கம் தமிழ்மொழி வழிதான் நிகழ்த்தப்படுகிறது. அச்சமூக அமைப்பை மாறிவரும் பொருளாதார உறவுகள் மாற்றி வருகிறது. தமிழ்

மொழிதான் தமிழ்சமூகத்திற்கு அடிப்படை எனும் பொழுது, அம்மொழியின் இலக்கண, மரபு நூல் தொல்காப்பியம் அச்சமூகத்தின் முதன்மை நூலாகிறது.

மொழித்தொல்லியியல் என்பது மொழியியல் மற்றும் தொல்லியல் துறைகளை இணைத்து, குறிப்பாக எழுதப்பட்ட சான்றுகள் இல்லாத வரலாற்றுக்கு முந்தைய காலத்தைப் புரிந்துகொள்ள முயலும் வளர்ந்து வரும் ஒரு இடைநிலைத்துறையாகும். மொழித்தொல்லியியல், மொழி, பண்பாடு மற்றும் உயிரியல் ஆகியவற்றிற்கு இடையிலான தொடர்புகளை ஆராய்வதன் மூலம், மனிதகுலத்தின் கடந்த காலத்தைப் பற்றிய ஒருங்கிணைந்த பார்வையை உருவாக்க முயல்கிறது. மொழித்தொல்லியியல் என்பது வெறுமனே மொழியியல் மற்றும் தொல்லியல் துறைகளின் கூட்டுத்தொகையாக மட்டும் இருப்பதில்லை. மாறாக, அது ஒரு தனித்துவமான ஆய்வுப் புலத்தை உருவாக்குகிறது.

மொழியியல் மற்றும் தொல்லியல் (மற்றும் மரபியல்) ஆகியவை சுயாதீனமான சான்றுகளை வழங்குவதால், அவற்றின் முடிவுகள் ஒன்றுடன் ஒன்று ஒத்துப்போகும்போது, கடந்தகாலத்தைப் பற்றிய நமது புனரமைப்புகளின் நம்பகத்தன்மை கணிசமாக அதிகரிக்கிறது. ஒரு துறையின் தரவுகளில் உள்ள இடைவெளிகளை மற்ற துறையின் தரவுகள் நிரப்ப உதவும்.

இங்கு, மொழியும் (கருத்துக்கள், சமூக உறவுகள், உலகப் பார்வை போன்ற புலப்படாத அம்சங்களைக் குறிப்பது) மற்றும் பொருள்சார் பண்பாடும் (தொழில்நுட்பம், பொருளாதாரம், குடியேற்றங்கள் போன்ற புலப்படும் அம்சங்களைக் குறிப்பது) கடந்த கால மனித நடத்தைகளையும் சமூகங்களையும் புரிந்துகொள்வதற்கானப் பரஸ்பரம் தொடர்புடைய, ஒன்றுக்கொன்று விளக்கமளிக்கக்கூடிய சான்றுகளாகக் கருதப்படுகின்றன. இது மனித அனுபவத்தின் இந்த இரண்டு முக்கியப் பரிமாணங்களையும் – புலப்படும் தொல்பொருட்கள் மற்றும் புலப்படாத மொழி மற்றும் கருத்துக்கள் – இணைத்து, கடந்த காலத்தைப் பற்றிய ஒரு முழுமையான சித்திரத்தை உருவாக்க முயல்கிறது (Allison Burkette:2015.பக்.136)

மொழித்தொல்லியியல் (Linguistic Archaeology), சில சமயங்களில் தொல்மொழியியல் (Archaeolinguistics) என்றும் குறிப்பிடப்படுகிறது, இது மொழியியல் மற்றும் தொல்லியல் ஆகிய இரண்டு முக்கியத் துறைகளின் கோட்பாடுகள், வழிமுறைகள் மற்றும் தரவுகளை ஒருங்கிணைக்கும் ஒரு வளர்ந்து வரும் இடைநிலை ஆய்வுப் புலமாகும். இதன் முதன்மை நோக்கம், எழுதப்பட்ட வரலாற்றுப் பதிவுகள் இல்லாத அல்லது மிகக்குறைவாக உள்ள காலங்களின், குறிப்பாக வரலாற்றுக்கு முந்தைய காலங்களின் (prehistory) மொழிகள், பண்பாடுகள், சமூக அமைப்புகள் மற்றும் மக்கள்தொகை நகர்வுகளைப் புனரமைத்து, விளக்குவதாகும். **இது மொழியை ஒரு கலாச்சார ஆதாரமாகவும், பேசுவதை ஒரு கலாச்சார நடைமுறையாகவும் கருதி, மொழிக்கும் மனித சமூகத்தின் பிற அம்சங்களுக்கும் இடையிலான சிக்கலான தொடர்புகளை ஆராய்கிறது.**

காலத்தின் அசைவியக்கத் தொகுப்புதான் வரலாறு. அது நிலத்தோடு ஊன்றி நின்று நிலம் மனிதனில் அகவயப்படும் நிலையில் பண்பாடு அமைகின்றது. தலைமுறை தலைமுறையாக தொடர்ந்து வரும் கருத்தமைவுகளின் விரிவாக்க வினையே மன அமைப்புகளைத் தோற்றுவித்து பண்பாடோகிறது. பண்பாட்டைச் சொல்லாடல்கள் கட்டமைக்கின்றன. சொல்லாடல்களுக்கு மொழிதான் முதன்மையானது.

வரலாற்றுக்கு முந்தைய காலத்தைப் புனரமைக்கும் மொழித்தொல்லியியலின் திறன், மனிதகுலத்தின் ஆழமான கடந்த காலத்தைப் பற்றிய நமது புரிதலை கணிசமாக மாற்றியமைக்கும் ஆற்றலைக் கொண்டுள்ளது. குறிப்பாக, சமீபத்திய ஆண்டுகளில் பண்டைய டிஎன்ஏ (DNA) ஆய்வுகளின் மூலம் மரபியல் துறையில் ஏற்பட்டுள்ள புரட்சிகரமான முன்னேற்றங்களுடன் மொழித்தொல்லியியல் இணையும்போது, அதன் முக்கியத்துவம் மேலும் அதிகரிக்கிறது. இந்த மூன்று துறைகளின் (மொழியியல், தொல்லியல், மரபியல்) ஒருங்கிணைப்பு, மனித இடம்பெயர்வுகள், மக்கள்தொகை தொடர்புகள், விவசாயத்தின் பரவல், மற்றும் பண்பாட்டுப் பரிணாமம் போன்ற பெரிய அளவிலான வரலாற்று நிகழ்வுகள் பற்றிய புதிய மற்றும் விரிவான கதையாடல்களை உருவாக்கவும், பழைய கருதுகோள்களைத் திருத்தவும் உதவுகிறது. இந்த ஒருங்கிணைந்த அணுகுமுறை, ஒரு குறிப்பிட்டத் தொல்லியல் கண்டுபிடிப்புகளின் தொகுப்பை ("தொல்பொருள் பண்பாடு") ஒரு குறிப்பிட்ட மொழி அல்லது இனக்குழுவுடன் எளிமையாகச் சமன்படுத்தும் பழையப் போக்கினை மறுபரிசீலனை செய்யத் தூண்டுகிறது, மேலும் கடந்த காலச் சமூகங்களின் சிக்கலானத் தன்மையை வலியுறுத்துகிறது.

மொழித்தொல்லியியலை வரலாற்று மொழியியலின் ஒரு கிளை அல்லது அதன் ஒரு பயன்பாட்டுத் துறையாகக் கருதலாம். இது வரலாற்று மொழியியலின் மைய முறைகளான ஒப்பீட்டுமுறை (comparative method), உள்புனரமைப்பு (internal reconstruction), மற்றும் புரோட்டோ-மொழி புனரமைப்பு (proto-language reconstruction) ஆகியவற்றை முழுமையாகச் சார்ந்துள்ளது. ஆனால், வரலாற்று மொழியியல் பெரும்பாலும் மொழியின் உள் கட்டமைப்பு மாற்றங்கள் மற்றும் மொழிக்குடும்ப வகைப்பாட்டில் கவனம் செலுத்தும், அதேவேளையில், மொழித்தொல்லியியல் அந்த மொழியியல் கண்டுபிடிப்புகளைப் பயன்படுத்தி, அந்த மொழிகளைப் பேசிய மக்களின் பரந்த வரலாறு, பண்பாடு, இடம்பெயர்வுகள் மற்றும் சமூக அமைப்புகளைப் புனரமைக்க முயல்கிறது. இது மொழியியல் சான்றுகளுக்கு ஒரு பரந்த வரலாற்று விளக்கத்தை அளிக்க முயல்கிறது.

தொல்லியல், மொழித்தொல்லியியலுக்கு இடையிலான இன்றியமையாத பல உறவை கீழ்கண்டவாறு வகைப்படுத்தலாம்.

1.தொல்லியல் பொருள்சார் சான்றுகளை (material evidence) வழங்குகிறது. புனரமைக்கப்பட்டச் சொற்களஞ்சியத்தில் உள்ள பொருட்கள் (எ.கா., ஒரு குறிப்பிட்ட வகை கருவி, பயிர் அல்லது விலங்கு) தொல்லியல் பதிவில் காணப்படுகிறதா என்பதை ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

2.தொல்லியல் வழியாக குறிப்பாக கதிரியக்கக்கரிமக் காலக்கணிப்பு (radiocarbon dating) போன்ற முறைகள் மூலம், குடியேற்றங்கள், கலைப்பொருட்கள் மற்றும் பண்பாட்டு மாற்றங்களுக்கு முழுமையான காலவரிசையை (absolute chronology) வழங்க முடியும். இது மொழியியல் மாற்றங்களின் காலத்தை மதிப்பிட உதவும்.

3.தொல்லியல் தளங்களின் புவியியல்பரவல், மொழிப்பரவல் மற்றும் இடம்பெயர்வு பற்றிய கருதுகோள்களைச் சோதிக்க உதவுகிறது.

மறுபுறம், மொழித்தொல்லியியல் தொல்லியல் ஆய்வுகளுக்குப் பங்களிக்க முடியும். தொல்லியல் பதிவுகள் பெரும்பாலும் பொருள்சார்ப் பண்பாட்டில் கவனம் செலுத்துகின்றன. ஆனால், சமூக அமைப்பு, உறவுமுறை விதிகள், மத

நம்பிக்கைகள், அரசியல் சித்தாந்தங்கள் போன்ற பொருள்சாராப் பண்பாட்டுக் கூறுகள் *(non-material culture)* தொல்லியல் பதிவில் தெளிவானத் தடயங்களை விட்டுச் செல்வதில்லை. புனரமைக்கப்பட்டச் சொற்களஞ்சியம் மற்றும் மொழி அமைப்புகள் மூலம், மொழித்தொல்லியியல் இந்தக் கூறுகளைப் பற்றி அறிய உதவக்கூடும்.

இருப்பினும், தொல்லியலாளர்களால் அடையாளம் காணப்படும் "பண்பாடுகள்" *(archaeological cultures* - எ.கா., ஒரு குறிப்பிட்ட பாணி மட்பாண்டங்கள் அல்லது கருவிகளால் வரையறுக்கப்படுபவை) மற்றும் மொழியியல் ரீதியாக வரையறுக்கப்பட்டக் குழுக்களுக்கு இடையே ஒருநேரடி, ஒன்றுக்கு ஒன்று என்ற சமன்பாட்டை *(equation)* ஏற்படுத்துவது மிகவும் சிக்கலானது மற்றும் பெரும்பாலும் தவறானது என்ற புரிதல் தற்போது வளர்ந்துள்ளது. ஒரு குறிப்பிட்ட மட்பாண்ட பாணியைப் பயன்படுத்திய மக்கள் அனைவரும் ஒரே மொழியைப் பேசியிருக்க வேண்டிய அவசியமில்லை, அல்லது ஒரு மொழியைப் பேசிய மக்கள் அனைவரும் ஒரே மாதிரியான பொருள்சார் பண்பாட்டைக் கொண்டிருக்க வேண்டிய அவசியமில்லை. மாறாக, இரண்டு துறைகளின் தரவுகளையும் இணைக்க, அவற்றின் பின்னணியில் உள்ள பரந்த சமூகப்பொருளாதார அல்லது மக்கள்தொகை இயக்கவியல் சக்திகளை *(driving forces)* அடையாளம் காணும் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

தமிழ்நாட்டுச் சூழலில், தொல்லியல் மற்றும் மொழியியல் (மற்றும் கல்வெட்டியல்) இடையிலான தொடர்பு மிகவும் பயனுள்ளதாக இருந்துள்ளது. கீழடி, பொருந்தல், ஆதிச்சநல்லூர் போன்ற இடங்களில் மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகள், அங்கு கிடைத்த தமிழ்-பிராமி எழுத்துக்கள் பொறித்த மட்பாண்ட ஓடுகள், மற்றும் பிற தொல்பொருட்கள், தமிழ் மரபுநூலான தொல்காப்பியம், சங்க இலக்கியங்களில் விவரிக்கப்பட்ட சமூக அமைப்புமுறை, நகரமயமாக்கல், எழுத்தறிவு மற்றும் வணிகத் தொடர்புகளுக்கு உறுதியான சான்றுகளை வழங்கியுள்ளன. தமிழ்-பிராமி கல்வெட்டுகளின் ஆய்வு, தமிழ் மொழியின் பழமையையும், அதன் ஆரம்பகால வரிவடிவத்தையும் புரிந்துகொள்ள உதவியுள்ளது. இது மொழி, வரலாறு, இலக்கியம் மற்றும் தொல்லியல் எவ்வாறு ஒன்றோடொன்று பிணைந்துள்ளன என்பதற்கு ஒரு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

தொல்லியல் பண்பாடு = மொழி +மக்கள்" என்ற எளிமைப்படுத்தப்பட்ட சமன்பாடு பரவலாக நிராகரிக்கப்பட்ட போதிலும், மொழிப் பரவலுக்கும் முக்கிய தொல்லியல் நிகழ்வுகளுக்கும் இடையே தொடர்புகளைக் கண்டறியும் முயற்சி தொடர்கிறது. உதாரணமாக, விவசாயத்தின் பரவல் *(farming dispersal)* பல முக்கிய மொழிக் குடும்பங்களின் பரவலுடன் தொடர்புடையதாகக் கருதப்படுகிறது.

இதேபோல், பெரிய அளவிலான இடம்பெயர்வுகள், இந்தோ-ஐரோப்பிய மொழிகளின் பரவலுடன் இணைக்கப்படுகின்றன. இது எதைக் காட்டுகிறது என்றால், மொழி, பண்பாடு மற்றும் மக்கள் தொகை இயக்கவியல் ஆகியவை முற்றிலும் தொடர்பற்றவை அல்ல, மாறாக அவை சிக்கலான, பல அடுக்குகளில் பிணைந்துள்ளன. இந்த இணைப்புகளை விளக்குவதற்கு எளிமையான சமன்பாடுகளுக்குப் பதிலாக, மிகவும் நுட்பமான, சூழல் சார்ந்த மாதிரிகள் *(context-specific models)* தேவை என்பதை மொழித்தொல்லியியல் ஆய்வுகள் எடுத்துக்காட்டுகின்றன. இது தொடர்பின்மையை அல்ல, மாறாக சிக்கலான தொடர்பையே குறிக்கிறது.

மொழித்தொல்லியியலின் முக்கியத்துவம், அது மனிதகுலத்தின் பகிரப்பட்ட மற்றும் வேறுபட்ட கடந்த காலங்களைப் பற்றிய ஆழமான கதையாடல்களை *(narratives)* உருவாக்க உதவுகிறது. இது வெவ்வேறு கண்டங்களில், வெவ்வேறு காலங்களில் வாழ்ந்த மக்கள் குழுக்கள் எவ்வாறு ஒருவரையொருவர் சந்தித்தனர், தொடர்பு கொண்டனர், ஒன்றிணைந்தனர், அல்லது ஒருவரிடமிருந்து ஒருவர் வேறுபட்டனர் என்பதைப் பற்றிய அறிவை வழங்குகிறது. இந்த வரலாற்றுப் புரிதல், தற்காலத்தில் நிலவும் சமூக, பண்பாட்டு, மற்றும் இன அடையாளங்கள், குழுக்களுக்கு இடையிலான உறவுகள், மற்றும் பன்முகத்தன்மை பற்றிய நமது பார்வைகளை பாதிக்கவும், செழுமைப்படுத்தவும் கூடும். இது நாம் யார், எங்கிருந்து வந்தோம் என்ற அடிப்படை கேள்விகளுக்கு வரலாற்று ரீதியான பதில்களைத் தேட உதவுகிறது.

மேலும், மொழித்தொல்லியியல், குறிப்பாக மரபியலுடன் இணைந்து, "ஆழமான வரலாறு" *(Deep History)* என்ற வளர்ந்து வரும் கருத்தாக்கத்திற்கு கணிசமான பங்களிப்பைச் செய்கிறது. பாரம்பரியமாக, வரலாறு என்பது எழுதப்பட்ட ஆவணங்கள் கிடைக்கும் கடந்த சில ஆயிரம் ஆண்டுகளை மட்டுமே குறிப்பதாகக் கருதப்பட்டது. ஆனால் மொழித்தொல்லியியல் மற்றும் தொடர்புடைய துறைகள், மனித அனுபவத்தின் கால அளவை பல்லாயிரக்கணக்கான, ஏன் லட்சக்கணக்கான ஆண்டுகள் வரை நீட்டிக்க உதவுகின்றன. இது மனித சமூகங்கள், பண்பாடுகள், மற்றும் மொழிகளின் பரிணாம வளர்ச்சியைப் பற்றிய ஒரு மிக நீண்ட காலப் பார்வையை வழங்குகிறது. இது, வரலாற்றை குறுகிய, ஆவணம் சார்ந்த காலங்களுக்குள் கட்டுப்படுத்தும் போக்கிற்கு சவால் விடுப்பதோடு, மனித இனத்தின் ஒட்டுமொத்தக் கதையைப் பற்றிய நமது புரிதலை விரிவுபடுத்துகிறது.

பரிமாணம்	**புது வரலாற்றுவாதம் *(New Historicism)***	**மொழித்தொல்லியியல் *(Linguistic Archaeology)***
முதன்மை ஆய்வுப் பொருள்	இலக்கிய மற்றும் பண்பாட்டு உரைகள் *(Texts)*	மொழி *(Language)*, தொல்லியல் எச்சங்கள், மரபணு தரவு
வரலாறு/கடந்த காலம் பற்றியப் பார்வை	சொல்லாடல், அதிகாரம், கருத்தியல் ஆகியவற்றால் கட்டமைக்கப்பட்டது; உரை போன்றது, அகநிலையானது	மக்கள்தொகை நகர்வுகள், தொழில்நுட்ப/பண்பாட்டு மாற்றங்கள், மனித-சுற்றுச்சூழல் தொடர்புகளின் செயல்முறை; புனரமைக்கக்கூடியது (வரம்புகளுடன்)
முக்கிய வழிமுறைகள்	உரை பகுப்பாய்வு, காப்பக ஆராய்ச்சி, சொல்லாடல்பகுப்பாய்வு, இடைநிலை அணுகுமுறை (மானுடவியல்)	ஒப்பீட்டுமொழியியல்,புனரமைப்பு,தொல்லியல், காலக்கணிப்பு, மரபணு பகுப்பாய்வு, இடைநிலை அணுகுமுறை (அறிவியல்)

அதிகாரத்துடனான உறவு	அதிகாரம் எவ்வாறு உரைகளை வடிவமைக்கிறது, எதிர்க்கப்படுகிறது, கட்டுப்படுத்தப்படுகிறது, என்பதை முதன்மையாக கவனப்படுத்துகிறது	மொழிப் பரவல், ஆதிக்கம் போன்றவற்றின் பின்னணியில் உள்ள சமூக/ அரசியல் இயக்கவியலின் ஒரு பகுதியாக இருக்கலாம் என இராண்டாம் பட்சமாக் கருதுகிறது
சூழலின் பங்கு	இன்றியமையாதது; உரையின் அர்த்தத்தை தீர்மானிக்கிறது அல்லது பாதிக்கிறது	இன்றியமையாதது; மொழி மாற்றங்கள் மற்றும் பரவலுக்கான விளக்கத்தை வழங்குகிறது
முக்கிய தாக்கங்கள்	மார்க்சியம், ஃபூக்கோ, கீர்ட்ஸ், பின்-கட்டமைப்பியல்	வரலாற்றுமொழியியல், தொல்லியல், மானுடவியல், மரபியல்
முக்கிய திறனாய்வுகள்/ சவால்கள்	வரலாற்றுமுறை, துணுக்குகளின் பயன்பாடு, அதிகாரப் பகுப்பாய்வு (கட்டுப்பாடு), சார்புநிலை, கோட்பாட்டு தெளிவின்மை	காலவரிசை, புனரமைப்பு வரம்புகள், தரவு ஒருங்கிணைப்பு, மரபணு விளக்கத்தின் ஆபத்துகள், துறைசார் தடைகள்
கால அளவு	முதன்மையாக வரலாற்று காலங்கள் (எழுதப்பட்ட பதிவுகள் உள்ளவை)	முதன்மையாக வரலாற்றுக்கு முந்தைய காலங்கள்
இறுதி இலக்கு	உரைகளை அவற்றின் வரலாற்று/அதிகார சூழலில் விளக்குதல்	கடந்தகால மொழிகள், பண்பாடுகள், மக்களின் வரலாற்றைப் புனரமைத்தல்
துறைசார் சார்பு	மானுடவியல் / சமூக அறிவியல் (Humanities / Social Sciences)	சமூக அறிவியல் / இயற்கை அறிவியல் (Social Sciences / Natural Sciences)

அரசியல் பொருளியல் மாற்றங்களுடேத் தமிழ்ப் பெருநிலத்தைக் கட்டமைக்கும் நோக்கத்தின் வெளிப்பாடுதான் தொல்காப்பியம். நிகர்த்து மேல்வந்த வேந்தர்களின் எழுச்சியால் தமிழ்ப்பெருநிலம் கட்டமைகிறது. அப்பெருநிலத்தை தமிழ்ச் சமூகத்தோடு இணைக்கும் பணியைச்செய்தது தொல்காப்பியம். தொல்காப்பியம் வழிதான் தமிழ்ப்பெருநிலம் அறியப்படுகிறது. தன்மொழியின் சொற்களை வகைப்படுத்திப் பிறமொழிச்சொற்கள் கலப்பால் தமிழ்மொழியைச் சிதைவிலிருந்து காத்தது தொல்காப்பியம். தொல்காப்பியத்தைத் தமிழ்காப்பு நூல் எனலாம்.

மொழிப் பிரதித்தன்மையில் வரலாற்றைகக் கட்டமைத்து தொடரும் நிலையில் சொல்லாடல்களால் அமையும் பண்பாடும், பிரதிகளை உருவாக்கிகொண்டு நகர்கின்றது. இந்நிலையில் வரலாற்றைக் கட்டமைக்க தொல்லெச்சங்களின் சான்றுகளோடு பிரதிகளைக் கட்டமைக்கும் மொழித்தொல்லியலும் அவசியமாகிறது. தமிழ்ப்புலத்தின் வரலாற்றை அறிவதற்கு மொழி நூல் என்பதைத் தாண்டி பொது அறிதலை நிலைப்படுத்துவதும், வாழ்வியலை வரையறுப்பதும் பெருநிலத்தைக் கட்டமைப்பதுமான தொல்காப்பியத்தை அறிவது அடிப்படையாகின்றது.

மேற்கண்ட நிலைப்பாடுகளைத் தொல்காப்பியம் வழி அறிவதன் மூலம் சமூக அசைவியக்கத்தை உய்த்தறியலாம். மொழி இரு உயிர்களிடையேயானது, பொது அறிதலை தோற்றுவித்து அதன் வழி உணர்வுகளை (conscious) வெளிப்படுத்துகிறது. அதாவது பொருள் கொள்ளுதல் என்பது அறிவுடன்படுதல் எனும் நிகழ்வாகும். அந்நிகழ்வுக்கு இரு உடலின் “நாட்டம்” (முனைப்பான விருப்பம்) அடிப்படையாகிறது.

நாட்டம் இரண்டும் அறிவுடன்படுவதற்கு
கூட்டி உரைக்கும் குறிப்புரையாகும். (தொல். சூத்திரம்.93)

எனது தொல்காப்பியம்பியம் உரைப்பதில் ‘அறிவுடன்படுதல்’ பொருள் குறித்த செயல் (ஆக்கம்) சொற்களை (கிளவி) சொல்லாடல்களை (கிளவியாக்கம்) தோற்று விக்கின்றன.

மனிதர்கள் தான் முதல் தொல்லெச்சம் என்பார் பேராசிரியர் செல்வகுமார், மனித உடலியக்கம் நினைவுகளால் ஒழுங்கமைகிறது. நினைவுகளின் வடிவம் மொழி. நினைவுகள் உடலியங்கும் நிலம், பொழுதுகள் குறித்தச்சொற்களின் தொகுப்பாகவே உள்ளது.

எல்லா சொல்லும் பொருள் குறித்தனவே – (சொல்.பொருள்)

தொல்லெச்சமான மனித உடலில் சொற்களும் சொல்லாடல்களும் (கிளவி/ கிளவியாக்கம்) பொருள் குறித்த அறிவுடன்படுதலின் நிட்சியை வளர்த்துக் கொண்டே நிலமும், பொழுதும் நினைவடுக்குகளில் தகவமைகின்றன. மொழி வழியாக அறிவுடன்பட்டுப் பொது அறிதலும், பொது நினைவுகளைக் கட்டமைத்துக் கொள்வதும் நிலமும், பொழுதும் சார்ந்து நிகழ்வதால், புறம் அகவயப்படுகிறது. இவ்வகை நிகழ்வால் மொழித் தொல்லெச்சமாகிறது.

மொழிக்கு நிலம் அகவயமாகவும் நிலத்திற்கு மொழி புறவயமாகவும் அமைந்துள்ளது பிரிக்க முடியாத உறவு. உடலினுள் மொழி நிலத்தை அகவயப் படுத்துகிறது. தொல்காப்பியத்தின் திணைப்பகுப்பால் இது சாத்தியமாகின்றது.

திணை நிலத்தையும் நிலத்தினுடான வாழ்வியலையும் வகைப்படுத்துகிறது, நிலமும் பொழுதும் அரசு அதிகாரத்தில் நேரடி தொடர்புடையவை.

முல்லை குறிஞ்சி நெய்தலேனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே – (தொல்.பொருள்.5)

நிலம் பொதுவானதாக இருந்தாலும் அதன் சூழலியலால் பாகுபாடு கொண்டது நிலத்துடன் மனித வாழ்வியலின் சூழலியல் உறுதியனச் செயல்பாடுகளைக் கொண்டது. நிலம் சூழலியல் தொடர்புடனே அறியப்படுகிறது, சூழலியலை இயந்தும் பிரண்டும் வாழ்வியல் தொடர்கின்றது.

"உலகத்துப்பொருள் எல்லாம் உணர்தல் வேண்டுமாயின், அது முதல், கரு, உரிப்பொருள் எனத் தொகைநிலையான் அடங்கும். அவ்வாறு வகுக்கப்பட்ட பொருளை உறுப்பினாலும், தொழிலினாலும், அன்பினாலும் பாகுபடுத்தி நோக்க வரம்பிலவாய் விரியும். இக்கருத்தினை இவ்வாசிரியர் உலகத்துப் பொருளெல்லாவற்றையும் முதல், கரி, உரிப்பொருள் என ஓதினார் என்றுணர்க". (இளம்பூரணர்)

தொல்காப்பியம் திணையியலின் நிலம், பொழுதை முதல் பொருளாக முன்வைக்கின்றது. வரலாற்றெழுதுதலில் நிலம் முதன்மையானது.

முதலெனப் படுவது நிலம் பொழுதிரண்டின்
இயல்பென மொழிப வியல்புணர்ந் தோரே *(தொல். அகத்திணை. 4)*

ஒரு மொழியின் இறுதி இலக்கு மனிதனை நிலத்துடன் இணைப்பதே, மொழியின் முதல்வினை வெளியே (புறத்தை-இயற்கையை) மனிதமயமாக்குவதே (அகமாக்குதல்-மனம்) அதாவது புறவெளியை அகவயாமாக்குவதன் மூலம் மனத்தையும் அதன் மூலத்தையும் மனிதனையும் கட்டமைத்தல், பின் மனிதனை இடப்படுத்துவதும் *(special-being)* தனது மொழி அலகுகளால் வரலாறு எனும் காலம் பற்றிய நினைவுகளை அடையாளப்படுத்துவதன் மூலம் மனிதனை காலத்திற்குள் நிறுத்துவதும்*(Tomporal–being)* இடம், காலம் பற்றிய நினைவுகளின் வழியாக தனக்கான நிலம் பற்றிய வரைபடங்களை நினைவு தளத்தில் வரைவதும் பின் அந்த நிலத்தை வெல்வதும் நிலத்துடன் பிணைப்பதுமே *(ஜமாலன்:2013, 29-30)*

திணைப்பகுத்தலில் அகம், புறம் பகுத்தல் உடமையோடுத் தொடர்புடையது. உடமைத்தோற்றம் கண்டபொழுது இப்பகுத்தல் தோன்றியிருக்கலாம். நிலமெனும் புறத்தை உடைமையாகவும், அகத்தை உடமை உறவாகவும் கருதமுடியும். அகம் பெண்ணை முன்னிறுத்தி அல்லது ஆண்-பெண் உறவு பேணுதலில் பெண்ணை உடமையாகக் கருதும் நிலைத்தோன்றி, உடமை உறவாக ஆண்-பெண் உறவு நிறுவப்பட்டதாக் கூறலாம்.

நிலம்-பொழுதில், பொழுது என்பதை சிறுபொழுது பெரும்பொழுதாக வகுத்தனர். மனிதச் செயல்பாடுகள் காலத்தினால் சூரியனை அடிப்படையாகக் கொண்ட சுழற்சியை (எள்+பாடு=எற்பாடு, எள்-சூரியன், பாடு-செயல்) நடுநிலைப்படுத்தி அமைகிறது.

ஆற்றின் தடம் திணைப்பகுத்தலில் ஓர் வரன்முறையை அளித்ததாகக் கருதலாம். ஆற்றின் தொடக்கமான மலை குறிஞ்சியாக, மலையிறங்கும் காடு முல்லையாக,

அது சுமந்த வண்டல் பரவும் நிலம் மருதமாக, அது ஓடி அடங்கும் இடம் நெய்தலாக உள்ளதே இக்கருத்துக்கு அடிப்படையாகிறது.

காடு மலையு முல்லை குறிஞ்சி
கூதிர் யாம மென்னேர் புலவர்
பனியெதிர் பருவமு முரித்தென மொழிப
வைகுறு விடியன் மருத மெற்பாடு
நெய்த லாதன் மெய்பெறத் தோன்றும்
நடுவு நிலை மருங்கின் முன்னிய நெறித்தே
பின் பனி தானு முரித்தென மொழிப
இருவகை பிரிவு நிலைபெறத் தோன்றினு
முரிய தாகு மென்மனார் புலவர்.

நிலமும், பொழுதும் வரலாற்று நினைவடுக்குகளை உருவாக்குகின்றன. வரலாற்றுக்கு நிலம் என்பது முதன்மையானது. முதற்பொருள் பெயர்தலற்றது. நிலம், கருப்பொருள் உரிப்பொருள் பெயர்தலால் திணை மயக்கம் கொள்ளும் என கூறப்பட்டது. பெயர்தலில் முதன்மையானது மனித உடலே, மொழியின் இறுதிப் பண்பாகிய மனிதனை நிலத்துடன் இணைப்பதில் காலம் தீவிரச் செயலாற்றுகிறது. அது வரலாற்றைக் கட்டமைக்கிறது. நிலமெனும் புலன் தொடர்புடைய மனித செயல்பாடுகள், காலத்தினால் அளவிடப்படுவதும் அவை நிலம் சார்ந்த வரலாறாக நினைவுத்தொகுதி ஆக்கப்படுவதும் மொழியின் தொடர்ச் செயல்பாடாகிறது.

தமிழ்மொழியியல் சான்றுகளானத் தொல்காப்பியம், சங்க இலக்கியங்களின் காலம் பற்றிய உரையாடல் இன்னும் முடிந்தபாடில்லை. இவைகளின் காலம் வரலாற்றெழுதுதலில் உற்ற துணையாக நிற்கிறது. அவற்றையும் புறச்சான்றுகளான தொல்லெச்சங்களின் ஆய்வு அடிப்படையில் வரலாற்றெழுதுதல் கட்டமைக்கப்படவேண்டும். இது மொழித்தொல்லியல் சார்பானது.

வேந்துவிடு முனைஞர் வேற்றுப்புலக் களவி//னாதந்தோம்பன் மேவற் றாகும் (தொல்.பொருள்:57) இதன்படி அரசன் ஏவிய வழி வெட்சிவீரர்கள் ஆநிரைக் (கால்நடைகளை) கவர்ந்து வந்து அவற்றை மீட்கவிடாமல் புரத்தல் வெட்சியின் பொருண்மையாகும். இதனை அடுத்து வரும் நூற்பாவில் (நூற்பா: 58) ஆநிரை பூசல் நிகழ்தலைப் பதிநான்குச் செயல்பாடு(துறை)களாகப் பகுத்துக் கூறுகின்றார். அச்செயல்களில் படையிலங்கு, அரவம், பாக்கத்து விரிச்சி, புடைகெடப் போகிய செலவு, ஒற்றின் ஆகிய வேய், வேய்ப்புறம் முற்றின் ஆகிய புறத்து இறை, முற்றிய ஊர் கொலை, ஆகோள் பூசல் மாற்று, நோயின்று உய்த்தல், நுவல் வழி தோற்றம், தந்து நிரை, பாதீடு, உண்டாட்டு, கொடை ஆகியவை. இவை நாகரிக சமூக நிலைக்கு முந்தையச் செயல்பாட்டோடு ஒத்துப்போகின்றன.

கவர்ந்த ஆநிரைகளைப் 'பாதீடு'(பகிர்தல்) செய்து அப்பாதீட்டில் மகிழ்ந்து 'உண்டாட்டு' என உற்றாரோடு மதுவுண்டு களித்து கொண்டாடுவது பற்றிக் கூறுவதில், கால்நடை என்ற பண்டமே மற்ற எல்லாப் பண்டங்கலையும் மதிப்பீடுவதற்குரிய பண்டமாக மற்ற பண்டங்களுக்கு மாற்றுப் பண்டமாக மறுப்பில்லாமல் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிலையில், இது வெட்சித்திணைத் தோன்றியதாகக் கருதலாம். இந்நிலை இரும்புக் காலத்திற்கு முன்பாகவோ அல்லது இரும்பு காலத்தை ஒட்டியதாகவும் கருதலாம்.

தமிழ்மொழித் தொடர்ச்சியாக எம்மொழியின் துணையின்றி தனித்து இயங்கும் மொழியாகவும், மூதாதையர் மொழி வரையறுத்தலில் சற்று சிக்கலற்றதாகவும், வேர்ச்சொற்களை (*etymology*) எளிமையாக வளத்தோடு அணுக ஏதுவாக இருப்பதாலும் மொழித்தொல்லியல் கோட்பாடுகளுடன் அணுக தமிழ் செம்மொழி நல்வாய்ப்பாக அமைகிறது.

இதனால் தமிழ்ப்புலத்து வரலாற்றை தொல்காப்பியத்திற்கு முன் – பின் என அணுகவும் வாய்ப்புள்ளது. புதுவரலாற்றுவாதம், மொழித்தொல்லியல் அணுகுமுறைகளோடு தமிழ்ப்புலத்தின் வரலாற்றைத் தொகுக்க தொல்காப்பியம் வழித்துணையாகும் அமைப்பைப் பெற்றுள்ளது.

புது வரலாற்றுவாதம், இலக்கியம் மற்றும் பண்பாட்டு ஆய்வுகளில் ஒரு செல்வாக்குமிக்க அணுகுமுறையாக உருவெடுத்து, உரைகளை அவற்றின் வரலாற்று சமூக மற்றும் அதிகாரச் சூழல்களிலிருந்து பிரிக்க முடியாது என்பதை வலியுறுத்தியுள்ளது. ஸ்டீபன் கிரீன்பிளாட் மற்றும் மிஷேல் ஃபூக்கோ ஆகியோரின் சிந்தனைகளால் பெரிதும் பாதிக்கப்பட்ட இந்த அணுகுமுறை, அதிகாரம், சொற்பொழிவு, கருத்தியல் போன்ற கருத்துக்களை மையமாகக் கொண்டு, இலக்கியம் அல்லாத உரைகளையும் ஆய்வுக்கு உட்படுத்தி, திறனாய்வாளரின் அகநிலைத் தன்மையையும் அங்கீகரித்துள்ளது. இருப்பினும், இது வரலாற்று முறைகள், அதிகாரப் பகுப்பாய்வு, மற்றும் கோட்பாட்டு நிலைப்பாடு ஆகியவற்றிற்காக விமர்சிக்கப்பட்டுள்ளது.

மொழித்தொல்லியியல், மொழியியல், தொல்லியல், மற்றும் சமீபத்தில் மரபியல் ஆகிய துறைகளை ஒருங்கிணைத்து, மனிதகுலத்தின் ஆழமான, எழுதப்படாத கடந்த காலத்தைப் புரிந்துகொள்வதற்கான ஒரு சக்திவாய்ந்த இடைநிலை அணுகுமுறையை வழங்குகிறது. ஒப்பீட்டு முறை, புனரமைப்பு, மற்றும் பல்வேறு துறைகளின் தரவுகளை ஒப்பிடுதல் ஆகியவற்றைப் பயன்படுத்தி, இது கடந்தகால மொழிகள், பண்பாடுகள், இடம்பெயர்வுகள், மற்றும் தொடர்புகள் பற்றிய புதிய நுண்ணறிவுகளை வெளிக்கொணர்ந்துள்ளது. ஆயினும், காலவரிசை, புனரமைப்பு வரம்புகள், தரவு ஒருங்கிணைப்பு, மற்றும் கருத்தியல் ஆபத்துகள் போன்ற குறிப்பிடத்தக்கச் சவால்களையும் இது எதிர்கொள்கிறது. இதற்கு தொல்காப்பியம் நல்வழிகளை நல்குவதாகக் கருதலாம்.

புது வரலாற்றுவாதம் மற்றும் மொழித்தொல்லியியல் ஆகிய இரண்டும், இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தோன்றிய, கடந்த காலத்தைப் பற்றிய நமது புரிதலை ஆழப்படுத்தவும் நம்பிக்கையுடன் எதிர்கொள்ளவும் முயன்ற முக்கியமான அறிவுசார் இயக்கங்களாகும்.

புது வரலாற்றுவாதம், இலக்கியம் மற்றும் பண்பாட்டு உரைகளை அவற்றின் வரலாற்று மற்றும் அதிகாரச் சூழல்களிலிருந்து பிரிக்க முடியாது என்று வாதிடுவதன் மூலம் இலக்கியத் திறனாய்வில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியது. இது வரலாறு, அதிகாரம், மற்றும் உரைக்கு இடையிலானச் சிக்கலான தொடர்புகளை முன்னிலைப்படுத்தியது.

மொழித்தொல்லியியல், மொழியியல், தொல்லியல் மற்றும் மரபியல் ஆகியவற்றை ஒருங்கிணைத்து, மனிதகுலத்தின் ஆழமான, எழுதப்படாத கடந்த காலத்தைக் குறிப்பாக மொழி, பண்பாடு, மற்றும் இடம்பெயர்வு ஆகியவற்றின் வரலாற்றை – புனரமைப்பதற்கான புதிய வழிகளைத் திறந்துள்ளது.

விபரம்	புது வரலாற்றுவாதம் *(New Historicism)*	மொழித்தொல்லியல் *(linguistic Archaeology)*
ஆய்வு நோக்கம்	அதிகாரம், சித்தாந்தம், கலாச்சார சூழல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. இலக்கிய உரைகளை கலாச்சார அதிகாரம் மற்றும் சித்தாந்தத்தைப் புரிந்து கொள்வதற்கான ஒரு லென்ஸாகப் பயன்படுத்துகிறது.	மொழியியல் பரிணாமம், உரையின் நம்பகத்தன்மை மற்றும் அதன் அசல் மொழியியல் சூழலில் பொருளின் விளக்கம் ஆகியவற்றில் கவனம் செலுத்துகிறது. வரலாற்று உரைகள் மற்றும் மொழி வளர்ச்சியைப் புரிந்து கொள்வதற்கு மொழியியல் பகுப்பாய்வைப் பயன்படுத்துகிறது.
ஆய்வு முறை	வரலாறு, மானுடவியல் மற்றும் கலாச்சார ஆய்வுகள் ஆகியவற்றிலிருந்து பெறப்பட்ட இடைநிலை அணுகுமுறைகளைப் பயன்படுத்துகிறது. சிக்கலான விரிவான விளக்கம் மற்றும் நிகழ்வு போன்ற கருத்தாக்கங்களைப் பயன்படுத்துகிறது.	உரைக் *crítica,* ஒப்பீட்டு மொழியியல், சொற்பிறப்பியல் மற்றும் ஹெர்மெனெயூடிக்ஸ் போன்ற மொழியியல் கவனம் செலுத்தும் முறைகளைப் பயன்படுத்துகிறது. கையெழுத்துப் பிரதிகள் மற்றும் மொழி மாற்றங்களின் விரிவான பகுப்பாய்வை உள்ளடக்கியது.
வரலாற்றுப் பார்வைகள்	வரலாற்றை அதிகாரம் உறவுகளால் பாதிக்கப்படும் ஒரு சிக்கலான, பெரும்பாலும் துண்டு துண்டான கதையாகப் பார்க்கிறது. வரலாற்றுச் சூழ்நிலை மற்றும் அதிகாரத்தின் பங்கு ஆகியவற்றில் அதிக கவனம் செலுத்துகிறது.	மொழியியல் மற்றும் உரையின் வளர்ச்சியின் மிகவும் நேரியல் புரிதலை நாடுகிறது. மொழி மூலம் கடந்த காலத்தை மிகவும் புறநிலையாக புனரமைப்பதற்கு முன்னுரிமை அளிக்கிறது.
மொழிப் பார்வை	மொழியை முதன்மையாக அதிகாரம் மற்றும் சித்தாந்தத்தால் வடிவமைக்கப்படும் மற்றும் வடிவமைக்கப்படும் ஒரு சொற்பொழிவாகப் பார்க்கிறது.	மொழியின் கட்டமைப்பு மற்றும் வரலாற்று அம்சங்களில் கவனம் செலுத்துகிறது. மொழியை அதன் சொந்த உள்ளார்ந்த

	மொழி என்பது சமூக மற்றும் அரசியல் சக்திகளின் கருவியாகவும் விளைபொருளாகவும் பார்க்கப்படுகிறது.	தர்க்கம் மற்றும் வளர்ச்சியுடன் கூடிய விஞ்ஞான ஆய்வின் பொருளாகக் கருதுகிறது.
இலக்கணம் மற்றும் பொருள் விளக்கம்	உரைகளை அவற்றின் பரந்த கலாச்சார மற்றும் சித்தாந்த கட்டமைப்புகளுக்குள் விளக்குவதில் அதிக அக்கறை காட்டுகிறது. சில நேரங்களில் ஓரங்கட்டப்பட்ட குரல்கள் அல்லது கலகத்தனமான கூறுகள் மீது கவனம் செலுத்துகிறது. சமூக-அரசியல் வாசிப்புகளுக்கு முக்கியத்துவம் அளிக்கிறது.	துல்லியமான உரைகளை நிறுவுவதற்கும் அசல் மொழியில் அவற்றின் நேரடி அர்த்தத்தை புரிந்து கொள்வதற்கும் அதிக முக்கியத்துவம் அளிக்கிறது. மொழியியல் துல்லியத்திற்கு முன்னுரிமை அளிக்கிறது.

இரண்டு அணுகுமுறைகளும் சூழலின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றன. பாரம்பரிய துறைசார் எல்லைகளைக் கடந்து செல்கின்றன. இருப்பினும், அவற்றின் ஆய்வுப்பொருள்கள், காலஅளவுகள், வரலாறு பற்றியப் பார்வைகள் மற்றும் வழிமுறைகள் ஆகியவற்றில் அவை கணிசமாக வேறுபடுகின்றன.

புது வரலாற்றுவாதம் மானுடவியல் சார்ந்த விளக்க அணுகுமுறையை முன்னிறுத்த, மொழித்தொல்லியியல் அறிவியல் சார்ந்த தரவுகளையும் முறைகளையும் அதிகளவில் ஒருங்கிணைக்கிறது. இரண்டு துறைகளும் குறிப்பிடத்தக்க வழிமுறைச் சவால்களையும் விமர்சனங்களையும் எதிர்கொள்கின்றன. புது வரலாற்றுவாதம் அதன் வரலாற்று முறை, அதிகாரப் பகுப்பாய்வு, மற்றும் கோட்பாட்டு நிலைப்பாடு குறித்து கேள்விக்குள்ளாக்கப்படுகிறது. மொழித்தொல்லியியல் காலவரிசை, புனரமைப்பு வரம்புகள், மற்றும் குறிப்பாக பல்வேறு துறைகளின் தரவுகளை ஒருங்கிணைப்பதில் உள்ள சிக்கல்களை எதிர்கொள்கிறது.

இந்த சவால்களை எதிர்கொண்டு, தங்கள் வழிமுறைகளையும் கோட்பாடுகளையும் தொடர்ந்து செம்மைப்படுத்துவது அவற்றின் எதிர்கால வளர்ச்சிக்கு இன்றியமையாதது.

முடிவில், புது வரலாற்றுவாதம் மற்றும் மொழித்தொல்லியியல் ஆகியவை, கடந்த காலத்தின் வெவ்வேறு அம்சங்களை முதலாவது உரைகள் மற்றும் சொற்பொழிவுகள் மூலமாகவும் இரண்டாவது மொழி, பொருள்சார் எச்சங்கள் மற்றும் மரபணுக்கள் மூலமாகவும் புரிந்துகொள்வதற்கான தனித்துவமான ஆனால் பகுப்பாய்வு அணுகுமுறைகளை வழங்குகின்றன.

அவை இரண்டும், கடந்த காலம் என்பது எளிமையானதோ அல்லது ஒற்றைப் பரிமாணமானதோ அல்ல என்பதையும், அதை அணுகுவதற்கு விமர்சன ரீதியான, சூழல் சார்ந்த, மற்றும் இடைநிலை அணுகுமுறைகள் தேவை என்பதையும் நமக்கு நினைவூட்டுகின்றன. இந்தத் துறைகளில் தொடரும் ஆய்வுகள், மனித வரலாறு

மற்றும் பண்பாடு பற்றிய நமது புரிதலை மேலும் செழுமைப்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை.

துணைநூல் பட்டியல்:

1.Karal Marx-Engels : The German Ideology, Marx – Engels collected works;Vol-5 in 1976, Publisher : Intl Pub Co Inc (1 June 1976),ISBN-10 : 0717805050,ISBN-13 : 978-0717805051

2.Michel Foucalt:1977, POWER/KNOWLEDGE Selected Interviews and Other Writings 1972-1977 Michel Foucault Edited by COLIN GORDON Translated by COLIN GORDON, LEO MARSHALL JOHN MEPHAM, KATE SOPER published by Pantheon Books, New York.

3.கோபிசந் நாரங்க் : 2005- அமைப்புவாதம், பின் அமைப்பியல் மற்றும் கீழைக் காவிய இயல்,தமிழாக்கம்: எச்.பாலசிப்பிரமணியம்.ISBN:978-81-260-1909-3 வெளியீடு; சாகித்திய அகாதெமி,புது தில்லி.

4. H. Aram Veeser:1993- The Historism Reader,Publisher : Routledge,USA; 1st edition (18 November 1993),ISBN-10 : 0415907829, ISBN-13 : 978-0415907828

5.K.A.Neelakanda shastri:2000,The Colas, published by UNIVERSITY OF MADRAS.

6.Y.Subbrayalu:1973-Political Geography of the Chola Country,published by The State Department of Archeology,Government of Tamilnadu.

7.Kesavan Veluthat:1993, The Political Structure of Early Medival South India, published by Orientlongman. ISBN-10 (1993, Orient Longman): 0863113095.

8.R.S.Sharma:2001, Early Medival Indian Society: A Study in Feudalism, by Orientlongman - ISBN-10: 8125056114, ISBN-13: 978-8125056119.

9. J.V.Stalin:1950- Marxism and Problems of Linguistis,Published by Foreign Languages Publishing house.

10.ஜமாலன்:2013.மொழியும் நிலமும்,கருத்து-பட்டறை வெளியீடு.

11. Allison Paige Burkette:2015, Language and Material Culture (IMPACT: Studies in Language, Culture and Society) Publisher; John Benjamins Publishing Company, ISBN-10 : 9789027218803,ISBN-13 : 978-9027218803

12.தொல்காப்பியம்;பொருளதிகாரம்-சேனாவரையர்.1956-திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்,திருநெல்வேலி.

13. Franklin Southworth:2012, Linguistic Archaeology of South Asia,Published by Taylor & Francis co.,IASN:9780415655446, ISBN-10:0415655447.

14. Gerd Carling:2024, Linguistic Archaeology, Publisher; Taylor &Francis, ISBN-13: 9781032271767 ;ISBN-10: 1032271760

தமிழ்க் கணக்கியல் அறிஞர் கு.வெங்கடாசலம்,
வரலாற்று அறிஞர் இல.தியாகராஜன் நினைவு
அறக்கட்டளைச் சொற்பொழிவுக் கட்டுரைகள்



விலை : ரூ 80/-